KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

Follow us:
# தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர்: 05, இதழ்: 169 குரோதி வருடம், மாசி மாதம் 01ஆம் திகதி வியாழக்கிழமை
(13.02.2025) ஹிஜ்ரி 1446, ஷஃபான் - 14, 0115 886187 - பக்கங்கள் 12
விலை ரூ.40

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

## வரிக்குறைப்பு இடம்பெறாது

**பிரதி அமைச்சர் சத்துரங்க தகவல்**



“அரசாங்கத்தால் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டத்தினூடாக தொழிற்றுறைக்குத் தற்போது விதிக்கப்பட்டுள்ள வரிகளைக் குறைப்பதற்கான வாய்ப்புகள் எதுவுமில்லை” - என கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர் சத்துரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய இந்த வருடத்தில் வரிக் குறைப்பு இடம்பெறாது என்பதுடன், சர்வ தேச நாணய நிதியத்துடனான இணக்கப் பாட்டுக்கமைய 15.1 சதவீத மொத்த தேசிய உற்பத்தியில் குறிப்பிட்டளவு வரித் தொகையையும் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க...

» 02 பக்கம்

# விகாரையை அகற்றுக!



## தையிட்டியில் திரண்ட மக்கள்

**பு.கஜிந்தன்**

சட்டவிரோத தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான தொடர் போராட்டமானது நேற்று முன்தினம் ஆரம்பமாகி...

» 02 பக்கம்

## முன்னாள் எம்.பி. திலீபன் இந்தியாவில் கைது



*(சி.திவியா)*

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் இந்தியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து இந்தியாவின் மதுரைக்குச் சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் அங்கிருந்து பிறிதொரு கடவுச்சீட்டில் வெளிநாடு செல்ல முற்பட்ட நிலையில், கேரளாவின் கொச்சி என்ற இடத்தில் வைத்து தமிழகப் பொலிஸாரால் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இந்தியாவின் புழல் சிறையில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேச எல்லைகளைக் கடந்து சவால்களுக்கு முகங்கொடுக்க நாம் ஒன்றிணைவோம்!

### 2025 உலக அரச மாநாட்டில் சர்வதேச தலைவர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு



உலக காலநிலைப் பிரச்சினைகள் வறியவர், செல்வந்தர் என்று பாராமல் சகலரினதும் கதவுகளைத் தட்டிக்கொண்டிருப்பதாகவும் தேச எல்லைகளைக் கடந்து பயணிக்கின்ற சவால்களுக்கு முகங்கொடுக்க நாங்கள் உலகளாவிய பிரஜைகள் என்ற வகையில் ஒன்றிணைய வேண்டுமெனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடை பெறும் உலக அரச உச்சி மாநாட்டில்...

» 02 பக்கம்


## மின் துண்டிப்பு நீடிப்பு; இறுதித் தீர்மானம் இன்று!



நாடு பூராகவும் இடம்பெற்ற மின் துண்டிப்பைத் தொடர்ந்து செயலிழந்த நுரைச்சோலை மின் நிலையத்தை மீண்டும் மின் விநியோகக் கட்டமைப் புக்குள் இணைக்கும்வரை நிலைமையை முகாமைத் துவம் செய்வதற்காக எதிர்வரும் நாட்களில் மின் துண்டிப்பை மேற்கொள்வதா, இல்லையா என்பது தொடர்பில் இன்று (13) அறிவிப்பதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

குறைந்துவரும் நாளாந்த மின் கேள்வி நிலையை முகாமைத்துவம் செய்யமுடியும்...

» 02 பக்கம்




**தேசிய மக்கள் சக்தியின் உயர்மட்டப் பிரமுகர்கள் இருவர் முன்னாள் ஜனாதிபதி ரணிலைச் சந்தித்து நீண்ட பேச்சுகளை நடத்தியுள்ளனர்.**

**அண்மையில் ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது பல முக்கிய அரசியல் விடயங்கள் பேசப்பட்டுள்ளனவாம்.**

**இதற்கிடையில் இந்தச் சந்திப்புக்குப் பின்னர் கட்சிப் பிரமுகர்களுடன் பேச்சு நடத்தியுள்ள ரணில், தான் விரைவில் பாராளுமன்றம் செல்லவேண்டுமெனக் கூறியுள்ளாராம்.**

## மக்களை குருடர்களாக்க முயற்சிக்காதீர்!

### எம்.பிக்களுக்கான நஷ்டஈட்டு விவகாரம் தொடர்பில் அரசாங்கம் மீது தொலவத்த சீற்றம்

“அரகலய போராட்டக் காலத்தில் போராட்டக்காரர் களால் தீ வைக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் களின் வீடுகளுக்காக பெற்றுக்கொடுக்கப்பட்ட நஷ்டஈடு தொடர்பில் அடிப்படையற்ற காரணங்களை முன்வைத்து மக்களைக் குருடர்களாக்க அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ முயற்சிக்கக் கூடாது. அவ்வாறு மீண் டும் விசாரணைகளை முன்னெடுப்பதென்றால் என்னி லிருந்தே விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும். இறுதியில் அரசாங்கம் மீண்டும் எங்களுக்கு நிதி செலுத்தவேண்டிய நிலை ஏற்படுமென்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சீ தொலவத்த தெரிவித்தார்...

» 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

**கள்ள பாஸ்போர்ட்டில கூட போகத் தெரியாம உந்தாள் அப்படி என்னதான் அரசியல்வாதியா இருந்தாரோ தெரியேல்ல பாருங்கோ?**



Amritha
மனம் மகிழ்ட்டும் நறுமணத்தால்
தமிழன்
உடன்
திருப்பதி புனித யாத்திரை

» 03 பக்கம்

## அரசியல் சூழ்ச்சிகள் இன்னும் முடிவுறவில்லை!

### சரியான ஆதாரங்களுடன் புத்தகம் வெளியிடப்போவதாக திலித் எம்.பி. அறிவிப்பு



நாட்டின் வரலாற்றில் இடம்பெற்ற ஒவ்வொரு சம்பவங்களின் பின்னணி யிலும் சூழ்ச்சிகள் நிறைந்துள்ளன. இன்னும் அந்த அரசியல் சூழ்ச்சிகள் முடிவுக்கு வரவில்லை. இவற்றைத் தொடர்ந்து பேசுவதில் பயனில்லை. அரசியல் சூழ்ச்சிகள் தொடர்பில் அநுரகுமார திசாநாயக்க மற்றும் பெசில் ராஜபக்ஷ போன்றோரால் பதிலளிக்க முடியாத தகுந்த ஆதாரங்களுடனான ஒரு புத்தகத்தை விரைவில் வெளியிடவுள்ள தாக சர்வசன அதிகாரம் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரு மான திலித் ஜயவீர தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டு...

» 02 பக்கம்

தமிழன் குறுஞ்செய்திகளை உடனுக்குடன் பெற...
பதிவு செய்வதற்கு
Dialog பாவனையாளர்களுக்கு
Thamilan என்று Type செய்து 7172 என்ற இலக்கத்துக்கு SMS செய்க
SLTMOBITEL The Connection பாவனையாளர்களுக்கு
REG(இடைவெளி)Thamilan என்று Type செய்து 77111 என்ற இலக்கத்துக்கு SMS செய்க
மாதமொன்றுக்கு ரூ.30 + வரி அடங்கலாக
தமிழன்

## உள்ளூராட்சிமன்றத் தேர்தல்;

### கட்சித் தலைவர்களுடன் ஆலோசிக்க அரசாங்கம் தீர்மானம்

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பிலும், தேர் தலுக்கான ஏனைய நடவடிக்கைகள் தொடர்பிலும் கட்சித் தலைவர்களிடம் ஆலோசனை பெறத் திட்டமிட்டுள்ளதாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற் றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபயரத்ன...

» 02 பக்கம்

70 வருடங்களாக நம்பிக்கை, மாறாத தரம் மற்றும் சக்தி
யானை மஸ்கனைட்
MASCONS
0766 733 744

# பிரமிட் முறை மூலமாக 68 கோடி ரூபா நிதி மோசடி

## சந்தேகநபர்கள் இருவர் கைது

(கண்டி நிருபர்)

இலங்கையின் பிரபல வர்த்தக பெயரைப் பயன்படுத்தி, சமூக ஊடகக் கணக்கை மோசடியான முறையில் உருவாக்கி அதன் மூலம் பிரமிட் திட்டமொன்றை மேற்கொண்டு 68 கோடி ரூபாவுக்குமதிகமான பண மோசடிசெய்த இருவரை கண்டி குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

சமூக வலைத்தள கணக்கு மூலம் பல்வேறு போட்டிகளை நடத்தி, ஆரம்பத்தில் சிறு தொகைப் பரிசுகள் வழங்கி நம்பிக்கையை ஏற்படுத்தி, பெரும் தொகை பெற்று பிரமிட் திட்டத்தில் பாரிய விற்பனை நிகழ்ச்சிகளை நடத்தி இந்த மோசடி நடந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட பெண், கம்பஹா வத்துமுல்ல பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவராவார். மற்றைய சந்தேகநபர் 27 வயதுடைய ராகம படுவத்த பகுதியைச் சேர்ந்தவர்.

சந்தேகநபர்கள் இலங்கையிலுள்ள 12 தனியார் மற்றும் பொது வங்கிகளில் கணக்குகளைப் பராமரித்து வருவதுடன், அந்தக் கணக்குகளில் திட்டமிட்டு வரவு வைக்கப்பட்டுள்ளதென்றும் இதனால், பணம் வரவு வைத்தவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் குறித்த எந்தத் தகவலையும் பெறமுடியாமல் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாகவும் தெரியவருகின்றன.

இந்த மோசடியில் சிக்கியவர்களில் பெரும்பாலானோர் பல்கலைக்கழக மாணவர்களெனவும் 50,000 ரூபாவிலிருந்து 04 இலட்சம் ரூபா வரை கடன் பெற்றுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த மோசடி தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த பல முறைப்பாடுகள் தொடர்பில் நீண்ட விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சந்தேக நபர்களை அவர்களது கைத்தொலைபேசிகள் மூலம் அடையாளம் கண்டு உண்மைகளை நீதிமன்றில் அறிக்கையிட்டு அவர்களின் கணக்குகளை சரிபார்த்துள்ளனர்.

அதில், சந்தேக நபரான பெண்ணின் வங்கிக் கணக்குகள் மூலம் 51 கோடி ரூபாவும் மற்றைய சந்தேக நபரின் கணக்குகள் மூலம் 17 கோடி ரூபாவும் உள்ளமை தெரியவந்துள்ளது. கணக்குகளில் பணம் வரவு வைக்கப்பட்டு, மிகக் குறுகிய காலத்தில் வேறு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சந்தேகத்துக்கிடமான முறையில் வரவு வைக்கப்பட்டுள்ள கணக்குகள் குறித்து வங்கி நிர்வாகம் மத்திய வங்கிக்கு தகவல் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால், அது நடக்காததால் அந்த வங்கிகளின் மேலாளர்களிடம் வாக்குமூலம் பெற பொலிஸார் எதிர்பார்த்துள்ளனர்.

பெண்ணொருவரின் தலைமையில் இந்தப் பெரும் மோசடி இடம்பெற்றுள்ளதுடன், அவரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மகாநாயக்க தேரர்களை சந்தித்தார்

## இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா

(எம்.ஏ.அமீனுல்லா)



இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்களை நேரில் சென்று பார்வையிட்டதுடன், இலங்கைக்கு ஆதரவாக இலங்கையில் இந்தியா அமுல் படுத்தும் திட்டங்கள் தொடர்பாக விசேட கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இந்திய அரசாங்கத்தினால் நாட்டிலுள்ள மத வழிபாட்டுத் தலங்களுக்கு இலவச சூரிய சக்தி அமைப்புகளை வழங்கும் திட்டத்தின் தற்போதைய நிலை குறித்து இந்திய உயர்ஸ்தானிகர் அவர்களுக்கு அறிவித்துள்ளார்.

மகாநாயக்கர்களின் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள இலங்கைக்குத் தேவையான ஆதரவை இந்தியா எப்போதும் வழங்குமென்றும் இரு நாடுகளுக்குமிடையில் அரசியல் உறவும் பௌத்த உறவுகளும் இருப்பதாகவும் தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி பதவிக்கு வந்த பின்னர் தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியா சென்றுள்ளதாகவும் எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் மேலும் வளருமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### மின் துண்டிப்பு...

என்றதன் அடிப்படையில் நேற்று (12) பூரணை தினம் என்பதால் மின் துண்டிப்பு இடம்பெற்றிருக்கவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பாணந்துறை கிரிட் மின் உற்பத்தி நிலையத்தில் இடம்பெற்ற அவசர நிலைமையால முழு நாட்டிலும் மின் துண்டிப்பு ஏற்பட்டிருந்தது. அதனால் ஏற்பட்ட கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் மூன்று மின் உற்பத்தி இயந்திரப் பிரிவுகளும் செயலிழந்தன.

அதன் பிரதிபலனாகக் கேள்வி நிலையை முகாமைத்துவம் செய்ய முடியாததன் காரணமாக கடந்த இரு நாட்களாக நாளாந்தம் ஒன்றரை மணிநேரம் மின் துண்டிப்பை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. இருந்தபோதும், மின் விநியோகத்தை முகாமைத்துவம் செய்ய முடியுமென்றதன் அடிப்படையில் நேற்று மின் துண்டிப்பை மேற்கொள்ளாமலிருக்க மின்சார சபை நடவடிக்கை எடுத்திருந்தது.

### உள்ளூராட்சி...

தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் திகதியை தற்போதே உறுதியாகக் கூற முடியாது. இருந்தபோதும், உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்மானம் தற்போது சபாநாயகருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை நாங்கள் அறிந்துகொண்டுள்ளோம்.

அதற்கமைய, எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் விசேட கலந்துரையாடலொன்றும் இடம்பெறவுள்ளது. பாராளுமன்றத்தில் கலந்துரையாடியதன் பின்னர் கட்சித் தலைவர்களின் நிலைப்பாடுகளை அறிந்துகொண்டதன் பின்னர் தேர்தலுக்கான திகதியை தேர்தல் ஆணைக் குழுவினால் அறிவிக்கக் கூடியதாக இருக்குமென்று தெரிவித்துள்ளார்.

### தேச எல்லை...

நேற்று (12) கலந்துகொண்ட ஜனாதிபதி, அங்கு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி, புத்தாக்கம் மற்றும் அரச நிர்வாக மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கையின் நோக்கு என்ற தலைப்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உரையாற்றினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நிலையான அபிவிருத்தி மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான இலங்கையின் அர்ப்பணிப்பும் அவசியமாகும். மானிட வர்க்கம் தொடர்பான முக்கியமான துறைகளில் எதிர்கால உத்திகள் மற்றும் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு இந்த மாநாடு உந்துசக்தியாக அமையும். உலகளாவிய சவால்களுக்கு முகங்கொடுக்க உலகளாவிய கூட்டுச் செயற்பாடும் முன்னணியொன்றினது அவசியமாகும்.

சமூக நீதி மற்றும் சட்டத்தின் ஆட்சியானது தரமிக்க தேசமொன்றைப் போன்றே வளமிக்க உலகமொன்றுக்கு மிகவும் முக்கியமானதாக அமைகின்றது. உடன்படிக்கைகளையும் சட்டங்களையும் முறைசார்ந்தவகையில் அமுலாக்குவதும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் உறுதிநிலையற்ற சமுதாயங்களுக்கும் முறைப்படி ஒத்துழைப்பை வழங்குவதும் உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்காக சுதந்திர ஊடகங்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களுக்கு வாய்ப்புகளை வழங்க வேண்டியதும் அவசியமாகும்.

டிஜிட்டல் அணுகல் உரிமைகள், சுற்றாடல் உரிமைகள் உள்ளடங்கலாக 1948 ஆம் ஆண்டு மனித உரிமைகள் நிகழ்ச்சி நிரலில் புதுப்பிக்கப்பட்ட உலகளாவிய பிரகடனமும் மிக அவசியமாக இருக்கிறது.

உலகளாவிய நிதியளிப்பு நிபந்தனைகள் அதிகரிக்கின்றமை, எதிர்காலத்தில் செலுத்தப்படவுள்ள பெருந்தொகையான கடனைச் செலுத்துதல் மற்றும் இறையாண்மைக் கடன் நெருக்கடிக்கு முகங்கொடுக்க நிகழ்கால சர்வதேச நிதிக்கட்டமைப்பு பலவீனமானவகையில் தயாராகியமையால் உலகளாவிய நோக்கு மிகவும் சிக்கலானதாக மாறியுள்ளது. நவீன உலகுக்கு நியாயமானவகையில் சீராக்கிக்கொள்ளக்கூடிய நிதிசார் திருத்தங்களின்பால் மாற்றமடைவது மிகவும் முக்கியமான விடயமாக அமைகின்றது.

அதற்காக பிரஜைகளின் பங்கேற்பு முக்கியமானது என்பதைச் சுட்டிக்காட்டியதோடு, பிரஜைகள் சுற்றுச்சூழல் மீது பற்றுக்கொண்ட நவீன சியட்டல்களாக மாற வேண்டும்.

மனிதர்களை மையப்படுத்திய எதிர்கால பொருளாதார அபிவிருத்தி குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது. சைபர் பாதுகாப்பு செயன்முறையை நோக்கி உலகம் நகர வேண்டியிருப்பதன் முக்கியத்துவத்தையும், ரோபோக்கள் பயன்பாட்டினால் தொழில் வாய்ப்புகளை இழக்கின்ற மனித சமூகத்தை வலுவூட்ட கல்வி, திறன் மேம்பாடு,புதிய தொழில் வாய்ப்புகளை அறிந்துகொண்டு சரியான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். அதற்காக உலகத் தலைவர்கள் ஒற்றுமையாகச் செயலாற்ற வேண்டும்.

பிரச்சினைகளைப் போன்றே எமது இதயங்களின் 'லப் டப்' ஓசையும் ஒன்றாக ஒன்று சேர்த்து உலகத்தைக் கட்டியெழுப்புவோம்.

"நாங்கள் சகோதரர்கள் என்றவகையில் ஒன்றாக வாழப் பழகிக்கொள்ளவேண்டும்" -என மார்ட்டின் லூதர் கிங் கூறியுள்ளார். 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' என்பதை உருவாக்க ஒன்றுசேர்வோம் என்பதை இலங்கை மக்களும் 2024 ஆம் ஆண்டில் வலியுறுத்தியுள்ளனர். "நாங்கள் ஒன்றுசேர்ந்து அழகான வாழ்க்கையை அழகான உலகத்தை உருவாக்கிடுவோம்" - என உலகத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

### அரசியல்...

உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் வெற்றிக்காக கண்டி மாவட்டத்தில் நேற்று முன்தினம் (11) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொகுதித் தலைவர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் திரிபுப்படுத்தல் இடம்பெற்று வருகின்றது என்பதை நான் முன்னரே அறிந்து வைத்திருந்தேன். அதன் காரணமாக பொதுஜன பெரமுனவை ரணிலுடன் பிணைப்பதற்கு எடுக்கப்பட்ட பெசில் ராஜபக்ஷவினால் எடுக்கப்பட்ட முயற்சிகள் மிகவும் அரசியல் நிலைவரங்களின் தோல்வியை ஏற்படுத்தும் பொறுத்தமற்ற கொடுக்கல் வாங்கல் என்பதால் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் சிக்கலுக்குள்ளாகுவார்கள் என்று அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தேன். அதன் பின்னணியில் வேறு வேலைத்திட்டமொன்று நோக்கமும் இருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தேன்.

திலும் அமுனுகம, காஞ்சன, ரமேஷ் பத்திரண உள்ளிட்ட சகலருக்கும் இந்த எச்சரிக்கையை விடுத்திருந்தேன். 30 வருடங்களுக்கு மேல் இந்த நாட்டு அரசியலை நன்கு அறிந்து வைத்துள்ளேன். நாட்டில் சூழ்ச்சியொன்று இடம்பெறுக்கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்ச்சியின் பின்னணியில் பூகோள அரசியலின் தாக்கம் இருக்கிறது. அதனால் அவதானமாக செயற்படவேண்டுமென்று 2006 ஆம் ஆண்டே மஹிந்தவுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தேன்.

அமெரிக்க சூழ்ச்சி, யூ.எஸ் எய்ட் தொடர்பிலெல்லாம் 2008 ஆம் ஆண்டே நான் வெளிப்படுத்திவிட்டேன். இன்றும் மஹிந்த ராஜபக்ஷவை நான் மதிக்கிறேன். இந்த விடயத்தை நான் அன்று மஹிந்தவுக்கு கூறியிருந்தேன். பி.பி.ஜெயசுந்தரவை துரத்தியடிப்போம் என்று குறிப்பிட்டிருந்தார். வாசுதேவ நாணயக்கார தாக்கல் செய்த வழக்கில் பி.பி. ஜெயசுந்தர தோல்வியைச் சந்தித்தார். மீண்டும் அவரால் எந்த அரச பதவிகளையும் வகிக்க முடியாதென்று உயர்நீதிமன்றம் உத்தரவொன்றையும் பிறப்பித்தது.

ஆனால், உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் சரத் நந்த சில்வா ஓய்வுபெற்றதும் பெசில் ராஜபக்ஷ பெரும் அழுத்தம் பிரயோகித்து வேறு பிரதம நீதியரசர் மற்றும் மேலும் சில நீதியரசர்களின் முன்னிலையில் அந்தத் தீர்ப்பை திசை திருப்பினார். பின்னர் மீண்டும் இந்தப் பொருளாதாரக் கொலையாளியை உயர் பதவியில் அமர வைத்தார். அது தொடர்பில் மஹிந்தவுடன் பல தடவைகள் பேசியுள்ளேன். இதனை ஒவ்வொருவரும் பல்வேறு வகையில் விவரிக்காலம்.

இறுதியில் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிபீடமேறி 24 மணிநேரமாவதற்குள் கோட்டாவும் நானும் விமர்சித்த அதே ஜெயசுந்தரவை ஜனாதிபதி செயலாளர் பதவியில் அமரவைத்து கோட்டாவை பலவீனப்படுத்தினார்கள். இறுதியில் இந்தச் சூழ்ச்சியின் பிரதிபலனாக எரிசக்தி அமைச்சராக இருந்த உதய கம்மன்பில 10 ரூபாவால் எரிபொருள் விலையை உயர்த்தியதும் பெசில் ராஜபக்ஷ நிதி அமைச்சராகி நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதுவே சூழ்ச்சி. இவற்றை மக்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்.

எதிர்காலத்தில் புத்தகமொன்றை வெளியிடுவேன். அரசியல் சூழ்ச்சிகளை தெளிவான காரணங்களுடன் அதில் தெளிவுபடுத்துவேன். பொதுஜன பெரமுனவின் பின்னணியில் இன்னும் பெசில் ராஜபக்ஷ இருக்கிறார். நாட்டில் மீதமிருக்கும் விடயங்களையும் இல்லாமலாக்கிவிட்டே அவர் செல்வார். அநுரகுமார திசாநாயக்கவால் பதிலளிக்க முடியாத, பெசில் ராஜபக்ஷவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அந்தப் புத்தகத்தை வெளியிடுவேன்.

நாமல் ராஜபக்ஷ தற்போது செல்லும் பயணம் இந்த நாட்டை இன்னும் சிக்கலுக்குள்ளாக்கும். சிறுவயதிலிருந்து அவருடன் நட்புறவாக இருக்கிறேன். பல்வேறு அலோசனைகளை வழங்கி வருகிறேன். நாமல் சிறந்து விளங்குவார் என்று எதிர்பார்த்தோம். எனக்கு அரசியலுக்கு வரும் எதிர்பார்ப்பு இருக்கவில்லை. ஆனால், ஒருசில செயற்பாடுகளே என்னை இன்று அரசியலில் கொண்டுவந்து சேர்த்துள்ளது. மக்களுக்கு நன்மையை ஏற்படுத்தக் கூடிய திட்டங்களைச் செய்யும் தெளிவான கொள்கையின் அடிப்படையிலேயே அரசியலுக்கு வந்துள்ளோம். அதற்கப்பால் தனிப்பட்ட ரீதியில் உழைக்கும் நோக்கம் எனக்கு இல்லை. இந்த அரசியலிலிருந்து பெறுவதற்கு எதுவும் எனக்கு இல்லை. ஆனால், அரசியலினால் இழப்பதற்கு என்னிடம் அநேகமானவை இருக்கின்றன. இருந்தபோதும் தொழில்முனைவோரை உருவாக்கும் முயற்சியை கைவிட மாட்டேன். சர்வசன அதிகாரத்தின் இந்தப் பயணம் மக்களின் அன்புமிக்க வெற்றியுடனேயே முடிவடையும் - என்றார்.

### மக்களை...

கொழும்பில் நேற்று (12) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

எங்களின் பரம்பரைக்குரிய வீடுகளை உடைத்து, எரித்து, சீரழிக்கப்பட்டு ஒருசில பாராளுமன்ற உறுப்பினர்கள் உயிரிழந்து, ஒருசில எம்.பிக்கள் காயங்களுக்குள்ளாகியுள்ள நிலையில், அவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் தொடர்பில் கணக்கெடுப்பு நடத்த தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முயற்சிக்கிறது. விசாரணைகளை முன்னெடுக்கத் திட்டமிடுகிறார்கள். இது தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தயவுசெய்து அது தொடர்பாக விசாரணைகளை என்னிலிருந்து ஆரம்பியுங்கள்.

நான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினூடாக கேட்ட இந்த நிவாரணம் கணக்கெடுப்பு தொடர்பான முறையை எனக்கு சமர்பிக்க வேண்டும். அதனூடாக ஒருமுறத்தில் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும். வீடுகளைச் சேதப்படுத்த வந்த சந்தேக நபர்கள் மாத்திரமே இந்தச் சம்பவத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். அவ்வாறு வீடுகளைச் சேதப்படுத்தி தீயிட்டுக் கொழுத்த வந்த அநேகமானவர்கள் மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்களே. இந்த சமூக வலைத்தளங்களில் அவர்களின் நிலைப்பாடுகளைப் பதிவிட்டு, இடங்களை சரியாகக் குறிப்பிட்டு இந்தக் குற்றச்செயல் தொடர்பிலான முழு விசாரணைகளிலும் எங்களால் பிரதிவாதிகளாக்க முடியும். சந்தேகநபர்களாக்க முடியும்.

அதற்கப்பால் சென்று நிவாரணம் கிடைத்தன் பின்னர் வீடுகளைச் சேதப்படுத்துவது பொருத்தமானது, தீயிட்டுக் கொழுத்துவது பொருத்தமானது, காயப்படுத்துவது பொருத்தமானது, கொலை செய்வது பொருத்தமானது என சம்பவத்துக்கு முன்னரான செயற்பாடுகளையும் பின்னரான செயற்பாடுகளையும் ஒன்றுசேர்த்து இந்த வழக்குக்கு புதிய சந்தேக நபர்களை அடையாளப்படுத்த முடியும். அதனூடாக அரசாங்கத்திடமிருந்து எங்களுக்குக் கிடைத்த நிவாரணத் தொகையை மீண்டும் அரசாங்கத்துக்கு ஒதுக்கீடு செய்து கொடுக்க முடியும்.

எனவே, இந்தச் சம்பவம் தொடர்பில் மீள் விசாரணைகளை மேற்கொள்வதென்றால், அதிக நிவாரணம் பெற்றுக்கொண்டுள்ளோம் என்று கூறினால் எனது வீட்டிலிருந்தே விசாரணைகளை ஆரம்பிக்க முடியும். அதனூடாக உண்மையை அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

அதுமட்டுமல்லாமல், 25 இலட்சம் ரூபா வரையானதை தொடர்பில் பேசுகிறார்கள். அனர்த்த முகாமைத்துவ சட்டம் என்பது இயற்கையான அனர்த்தங்களுக்காக நிதி பெற்றுக்கொடுக்கும் முறையாகும். எனவே, பரம்பரை ரீதியாக மிக கஷ்டங்களின் மத்தியில் உருவாக்கப்பட்ட வீட்டை உடைத்து சேதப்படுத்தி தீவைப்பது நீதியான செயற்பாடா என்பதை மக்களிடம் வினவ விரும்புகிறோம். இது இயற்கையான செயற்பாடா. இதனை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் கீழான நிவாரணத்தின் கீழ் கணக்கெடுக்க முடியுமா? எனவே, நளிந்த ஜயதிஸ்ஸ மக்களைக் குருடாக்க முயற்சிக்கக் கூடாது. இந்த அரசாங்கத்தின் கணிப்பின்படி செயற்கையாக இடம்பெற்ற இந்தச் சம்பவம் அனர்த்த முகாமைத்துவச் சட்டத்துக்குட்படாது. ஆனால், செயற்கையாக இடம்பெறும் ஒரு சம்பவம் கடவுளின் சட்டத்துக்குட்படுமா என்பது மக்களுக்கு சரியாகப் புரியும்.

அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் மீண்டும் விசாரணைகளை முன்னெடுப்பதென்றால் என்னிலிருந்தே விசாரணைகளை ஆரம்பியுங்கள். நான் பயங்கொள்ளப் போவதில்லை. இந்த விசாரணைகளின் மூலம் மீண்டும் இந்த அரசாங்கம் எங்களுக்கு நிதி செலுத்தவே நேரிடும் - என்றார்.

### விகாரையை...

நேற்றைய தினமும் இடம்பெற்றது.

குறித்த விகாரையானது மக்களின் காணிகளை அனுமதியில்லாது அபகரித்து கட்டப்பட்டுள்ள நிலையில் அதனை அகற்றுமாறு கோரி தொடர்ச்சியாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இவ்வாறான சூழ்நிலையில் ஜனாதிபதி தலைமையில் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமானது கடந்த 31.01.2025 அன்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது குறித்த விகாரை தொடர்பாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்து தெரிவித்தபோது, அந்த விகாரை அமைந்துள்ள காணிக்குப் பதிலாக மாற்றுக்காணிகளைப் பெறுவதற்குத் தயாராக இருப்பதாக வடக்கு மாகாண ஆளுநரும் பாராளுமன்ற உறுப்பினரான இராமநாதன் அர்ச்சுனாவும் தெரிவித்திருந்தனர்.

இந்தக் கருத்தானது தமிழ் மக்கள் மத்தியில் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில் குறித்த விகாரைக்கு எதிராகப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவைத் தெரிவித்திருந்தனர்.

அந்தவகையில், குறித்த போராட்டமானது நேற்று பாரிய அளவில் முன்னெடுக்கப்பட்டது. இதில் காணியின் உரிமையாளர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வேலன் சுவாமிகள், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். அமைப்பாளர் டேவிட் நவரட்ணராஜா, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது சங்கத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பினர், சமூகமட்ட அமைப்பினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

### வரிக்குறைப்பு...

வேண்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஹோமாகம, பனாகொட டெம்பிள்பார்க் தொழில் வலயத்துக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

விசேடமாக தற்போது நடைமுறையிலுள்ள மறைமுக வரிகளின் குறைப்புடன், காலத்துக்கேற்பவே இதனைச் செய்ய நேரிடும். காரணம், இந்த வருடத்தில் வரிக்குறைப்பை எதிர்பார்க்க முடியாது. சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டுக்கமைய 15.1 சதவீத மொத்த தேசிய உற்பத்தியில் குறிப்பிடளவு வரியை இணைத்துக்கொள்ள வேண்டும்.

இருந்தபோதும், இந்தச் செயற்பாடுகளிலிருந்து வெளியில் வரும்போது வருமானத்தை சேர்த்துக்கொள்ளும் திறன் அதிகரிக்கும். அதற்கான நிவாரணத்தை தொழிற்றுறைசார் உற்பத்திகளுக்கு மீண்டும் பெற்றுக்கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

அதற்கப்பால் விசேடமாக வங்கித்துறை மற்றும் தொழிற்றுறைசார் தொழில் நுட்ப முதலீடுகளுக்கு வரி நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்க புதிய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. இந்த சகல விடயங்களுக்குமான ஏற்பாடுகளை எதிர்வரும் 17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கக் கூடியதாக இருக்கும். வரவு - செலவுத் திட்டத்தினூடாக விசேடமாக தொழிற்சாலைகளுக்கு அவசியமான வசதி மற்றும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. எதிர்வரும் சில வருடங்களில் தொழிற்சாலைகளுக்கேற்ற பொருத்தமான சூழலை உருவாக்குவதற்கும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

தொழிற்றுறைக்கான பொருட்களை இறக்குமதி செய்வதற்கு புதிய வரிக் கொள்கையை அறிமுகப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்படும். கட்டணக் கொள்கை என்ற அடிப்படையில் புதிய வரிக் கொள்கையை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். அதனோடு உற்பத்தி உள்ளீடுகளுக்கான வரிக் குறைப்பு அல்லது நீக்குவதற்காக இந்த வரிக் கொள்கையை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். தமது இறக்குமதி உற்பத்தி உள்ளீடுகள் எவை என்பதை சகல தொழிற்றுறைசார்ந்தவர்களும் புரிதலுடன் இருக்கிறார்கள்.

மாதாந்தம் நாட்டில் தொழிற்றுறைசார் உற்பத்திகள் எவ்வளவு இடம்பெற்றாலும், மிகக் குறைந்த விலையிலும் வரி செலுத்தாமலும் சில சந்தர்ப்பங்களில் விலை மதிப்பு பட்டியலை குறைத்தும் இறக்குமதிகள் செய்யப்படுகின்றன. இது தொடர்பில் பாதுகாப்பு நடைமுறைகளைக் கொண்டுவரவும் எதிர்பார்த்துள்ளோம்'' - என்று குறிப்பிட்டுள்ளார்.

# தினசரி பலாபலன்கள்

## குரோதி வருடம் மாசி மாதம் 01ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்** – புத்திரர்களால் வீண் தொல்லையும் கவலையும் உண்டு, மனதைப் போட்டு குழப்பிக்கொள்வீர்கள். உடல் நலம் கவனம்.

**ரிஷபம்** – எதிர்பாராத விபத்துகள் ஏற்படலாம், வீடு, வாகனம் விற்பது வாங்குவது கவனம். தாய்வழி செலவுகள் தோன்றும்.

**மிதுனம்** – வேற்று மொழி நண்பர்களின் உதவிகள் கிடைக்கும், மனத் துணிவுடன் அனைத்தையும் சாதித்து வெற்றி பெறுவீர்கள்.

**கடகம்** – குதர்க்கமான பேச்சால் தொழில் ரீதியில் அவமானம், அபகீர்த்தி ஏற்படும், குடும்பத்தில் தேவையற்ற குழப்ப நிலைகள் உருவாகும்.

**சிம்மம்** – குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சி பிறக்கும், நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள்.

**கன்னி** – தேவையற்றவர்களின் நட்பால் தொல்லைகள் உருவாகும். உணவு, உறக்கம் தேடிப் போனாலும் கிடைக்காது.

**துலாம்** – தொழில் வியாபாரத்தில் அதிக இலாபங்களைப் பெறுவீர்கள், எதிர்பாராத தன வரவால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**விருச்சிகம்** – தொழில் மூலமாக பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் அமையும், புதிய பதவிகள் வந்துசேரும்.

**தனுசு** – பூர்வீக சொத்துகளால் வில்லங்கம் ஏற்படும், தந்தைக்கும் உங்களுக்கு மிடையிலான உறவு பாதிக்கப்படும்.

**மகரம்** – திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் மந்த நிலையை அடையும், வாய்ப் பேச்சால் வீண் பிரச்சினைகள்.

**கும்பம்** – கூட்டு வியாபாரத்தில் லாபம் உண்டு, தடைப்பட்ட திருமணம் உறுதிப் படுத்தப்படும் நாள், மனைவி அல்லது காதலியால் மகிழ்ச்சி.

**மீனம்** – நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும், நீண்ட நாள் கடனை இன்று அடைப்பீர்கள், எதிரிகளை அடக்கியாள்வீர்கள்.

| | |
|---|---|
| **திதி** | : பிரதமை மு.இ.8.22 வரை பின் துவிதியை |
| **நட்சத்திரம்** | : மகம் மு.இ.9.07 வரை பின் பூரம் |
| **பிறை** | : தேய்பிறை |
| **யோகம்** | : மரண யோகம் முழுவதும் |
| **வார சூலை** | : தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | : காலை- 9.27 – 12.27 மணி வரை; மாலை- 4.27 – 6.27 மணி வரை |
| **ராகு காலம்** | : 1.57 – 3.27 மணி வரை |
| **எமகண்டம்** | : 6.27 - 7.57 மணி வரை |
| **குளிகை** | : 9.27 - 10.57 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | : மகர ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முன்னிரவு 9.07 மணி வரை**

பரணி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம்,உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று முன்னிரவு 9.07 மணிக்கு மேல்**

அஸ்வினி, கார்த்திகை, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739

# தமிழக மீனவர்கள் நாசகாரச் செயலில் ஈடுபட்டுவிட்டு தொப்புள்கொடி உறவுகள் எனக் கூறுவதில் பயனில்லை

## அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவிப்பு



இலங்கையின் கடல் வளத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் தமிழக மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர் . இவ்வாறு நாசகார செயலில் ஈடுபட்டுவிட்டு செல்லும் வழியில் தொப்புள்கொடி உறவுகள் எனக் கூறுவதில் பயனில்லை என கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

தமிழக மீனவர்களின் அத்துமீறும் செயற்பாடு தொடர்பில் நேற்று (12) ஊடகவியலாளர்களுக்கு விசேட கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

தமிழக மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது. கடந்த காலங்களில் மூன்று நாட்கள் வந்தார்கள், தற்போது ஏழு நாட்களுக்கும் வருவதற்கு முற்படுகின்றார்கள். எமது நாட்டு மீன்களைப் பிடிப்பது மட்டுமல்ல, கடல் வளத்தையே நாசம் செய்கின்றனர். இதனால் நாளைய தலைமுறையினருக்குரிய கடல் வளம் இல்லாமல் போகின்றது.

எனவே, இலங்கை எல்லைக்குள் வந்து மீன்பிடிக்க வேண்டாமென தமிழக மீனவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். அதற்கான உரிமை அவர்களுக்குக் கிடையாது. எமது நாட்டு கடல் எல்லைக்குள் வந்து மீன்களைப் பிடித்துக்கொண்டு செல்லும் வழியில் எங்களை தொப்புள்கொடி உறவுகள் எனக் கூறுவதில் பயன் இல்லை.

தமிழக மீனவர்கள் மீதோ தமிழக தலைவர்கள் மீதோ எமக்கு எவ்வித கோபமும் இல்லை. ஒருசில மீனவர்கள்தான் ரோலர் படகுகளைப் பயன்படுத்தி, தடைசெய்யப்பட்ட வலைகளையும் பயன்படுத்தி எமது கடல் வளத்தை நாசமாக்குகின்றனர். அதனையே நாம் எதிர்க்கின்றோம்.

எமது நாட்டு எல்லைக்குள் அத்துமீறாவிட்டால் எவரையும் கைதுசெய்யவேண்டிய தேவைப் பாடு எழாது. எனவே, எங்களது கடல் எல்லைக்குள் புகுந்து, கடல் வளங்களை நாசமாக்க வேண்டாமென போராடும் தமிழக மீனவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். அவர்கள் எல்லைத் தாண்டாவிட்டால் எவ்வித பிரச்சினையும் எழாது" - என்றார்.

# இருபதாவது திருத்தச் சட்டம் பெசிலை பாராளுமன்றத்துக்குக் கொண்டுவரும் சதி

## திலித் ஜயவீர எம்.பி. கண்டியில் தெரிவிப்பு

*(எம்.ஏ.அமீனுல்லா)*

இருபதாவது திருத்தச் சட்டம் பெசிலை பாராளுமன்றத்துக்குக் கொண்டுவரும் சதி என சர்வஜன பலய கட்சியின் தலைவர் திலித் ஜயவீர எம்.பி. தெரிவித்தார்.

கண்டி, நுகவெல சர்வஜன பலய கட்சி காரியாலயத்தில் நேற்று முன்தினம் (11) நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

பொதுஜன பெரமுனவின் ஒவ்வொரு ஊடக சந்திப்பின் பிற்பகுதியிலும் பெசில் ராஜபக்ஷவின் புகைப்படம் திரையில் காட்டப்படுகிறது. அவர் நாட்டின் இன்னும் மிகுதியாக உள்ள சில பகுதிகளில் சுழன்று விட்டே வெளியேறுவார். நாமல் இப்போது ஆரம்பித்திருப்பது இந்த நாட்டை மேலும் அழிக்கும் பயணமேயன்றி வேறில்லை.

பொருளாதாரத்தில் இந்த நாட்டை மிகப் பெரிய வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வருவதற்கு அதற்கு தொடர்புடையதாக இருந்த பி.பி.ஜெயசுந்தரவே பொறுப்பேற்க வேண்டும். அவரிடமிருந்து கவனமாக இருக்கவேண்டும் என்று நான் 2006இல் சம்பந்தப்பட்டோருக்கு வலியுறுத்தியிருந்தேன்.





மொட்டும் ரணிலும் ஒன்றிணையும் சமயம் இந்த நாட்டில் ஒரு பாரிய அரசியல் மாற்றம் ஏற்படுமென்று நான் முன்னறிவித்தேன். பெசில் ராஜபக்ஷ ரணிலுக்கு ஆதரவாக இருப்பது சுயநல தேசியவாத ஒப்பந்தமே தவிர, அதில் நாட்டுக்கோ மக்களுக்கோ எந்த நலனும் கிடையாது. இதனால் நீங்கள் சிக்கலில் மாட்டிக்கொள்ளலாமென திலும் அமுனுகம, காஞ்சன விஜேசேகர, ரமேஷ் பத்திரன ஆகியோரிடம் கூறினேன்.

30 வருடங்களாக அரசியலில் இருப்பவர்களை விட நான் இலங்கையின் ஆட்சியை நன்றாகப் படித்து அதன் நுணுக்கங்களைப் புரிந்துகொண்டுள்ளேன். பெசில், ரணில் வசூலில் சதி நடப்பதை அன்று பார்த்தேன். பொருளாதாரத்தில் இந்த நாட்டை இவ்வளவு கீழ் நிலைக்குக் கொண்டுவந்த வகையில் பி.பி.ஜெயசுந்தரவே அதனைப் பொறுப்பேற்க வேண்டும். அவர் கவனமாக இருக்க வேண்டும்.

நமது பொருளாதாரம் அழியும் நாள் இனிவரும் காலங்களில் வரப்போகிறதென நான் மஹிந்தவிடம் பி.பி.ஜெயசுந்தர பற்றி 2008இல் கூறினேன். அப்போது அவரை வெளியேற்ற மஹிந்த விரும்பினார். அதுமட்டுமல்லாமல் அவர் மீண்டும் எந்த அரச பதவியையும் வகிக்க முடியாதென்று உயர் நீதிமன்றம் கூட தீர்ப்பளித்தது. முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். டி சில்வா ஓய்வுபெற்ற பின்னர், பெசில் இந்த முடிவை தாம் விரும்பியவாறு மாற்றியமைத்து, இந்தப் பொருளாதாரக் கொலையாளியை மீண்டும் அழைத்து வந்து நாற்காலியில் அமர வைத்தார்.

மஹிந்த ராஜபக்ஷ நிராதரவாக இருந்தார். கோட்டாபய ராஜபக்ஷ மிகவும் பலவீனமடைந்தார், அவர் ஆட்சிக்கு வந்து 24 மணிநேரத்துக்கு முன்பே, பெசில் தலையிட்டு பி.பி.யை ஜனாதிபதியின் செயலாளராக நியமித்தார். மத்திய வங்கி, நிதியமைச்சால் பி.பி.ஜெயசுந்தர விரும்பியபடி கையாடல் இடம்பெற்றது.

அப்போது பெற்றோலிய அமைச்சராக இருந்த உதய கம்மன்பில எண்ணெய் விலையை 10 ரூபாவால் உயர்த்தியபோது தலைமறைவான பெசில் இலங்கைக்கு வந்து நிதியமைச்சை கையில் எடுத்தார். இவை சதி இல்லையா? நாமலுக்கு ஒருவாரம் அமைச்சுப் பதவி கொடுத்துவிட்டு, சகல அமைச்சுகளையும் மேற்பார்வையிட வேறு அமைச்சரைக் கொடுப்பது சதி இல்லையா?

நாங்கள் மக்கள் முன் சென்று கோட்டாபய ராஜபக்ஷ குடும்பத்தை ஊக்குவிக்க வருபவர் அல்ல என்று கூறினோம். வண. அஸ்கிரி அனுநாயக்கவால் ஹிட்லரைப்போல் ஆட்சியாளர் என்று சொல்லப்பட்ட கோட்டாபய இறுதியாக பூனைக்குட்டியாக மாறினார். இவைதான் உத்திகள் – என்றார்.

# அற்ப பதவிக்காக தமிழ் மக்களை ஆளுநர் அடகு வைக்கக்கூடாது

## சட்டத்தரணி சுகாஷ் காட்டம்!

சட்டவிரோத தையிட்டி விகாரை விவகாரத்தில் வடமாகாண ஆளுநர் தனது அற்ப பதவிக்காக தமிழ் மக்களின் உணர்வுகளையும் உரிமைகளையும் அடகு வைக்க வேண்டாமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.

வலி வடக்கு தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு நேற்று (12) இடம்பெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண ஆளுநர் தனது பதவியை தக்க வைப்பதற்கும் எதிர்காலத்தில் பதவிகளை எதிர்பார்ப்பதற்கும் தையிட்டி சட்டவிரோத விகாரையை அகற்றக் கூடாதென்பதில் அக்கறையாக உள்ளார்.



அதேபோல் அரசியல் கோமாளி ஒருவரும் தையிட்டி விகாரையை அகற்றக் கூடாதெனக் கூறி திட்டமிட்ட அரச முகவர்களாக இவர்கள் செயற்படுகிறார்கள்.

தையிட்டி சட்டவிரோத விகாரை போராட்டத்தை கொச்சைப்படுத்தியவர்கள் இன்று புதன்கிழமை (நேற்று) இடம்பெற்ற மக்கள் போராட்டத்தைப் பார்த்திருப்பார்கள். மக்களின் உணர்வுகளை அறிந்திருப்பார்கள்.

தையிட்டியில் தனியார் காணியில் சட்ட விரோதமாக இராணுவத்தின் அனுசரணையுடன் கட்டப்பட்ட தையிட்டி விகாரைக் காணி மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மக்கள் தமது கொள்கையில் உறுதியாக இருக்கிறார்கள் மக்களின் காணிகள் மக்களுக்கே வேண்டும் மாற்றுக்காணிகளை ஏற்க மாட்டோம்.

ஆகவே, சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட தையிட்டி விகாரை உடைக்கப்படவேண்டும் பதவிகளுக்காக தமிழ் மக்களைக் காட்டிக் கொடுப்பதை அரசின் முகவர்கள் நிறுத்த வேண்டும் - என்றார்.




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2025 பெப்ரவரி, 13ஆம் திகதி, வியாழக்கிழமை

# துப்பாக்கிச் கலாசாரத்தை முடிவுறுத்தல் அவசியம்!

2025 ஆம் வருட ஆரம்பம் முதல் நேற்றுமுன்தினம் (2025.02.11) வரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 13 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கே.புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை 11 கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த 13 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில், பாதாள உலக கும்பல்களின் தலைமையில் 07 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் ஏனையவை தனிப்பட்ட தகராறு காரணமாக இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், பாதாள உலக கும்பல்களின் தலைமையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 09 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, 03 ரி-56 ரக துப்பாக்கிகள் மற்றும் 05 கைத்துப்பாக்கிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் 04 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக ஊடகவியலாளர் சந்திப்பின்போது, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் பொலிஸ் திணைக்களத்துக்குள் மொத்தம் 139 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது திணைக்களத்தின் வரலாற்றில் ஒரே நேரத்தில் மிகப்பெரிய இடமாற்றத்தைக் குறிக்கிறது என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த இடமாற்றத்தில் 105 தலைமை பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் 34 பொலிஸ் பரிசோதகர்கள் (IPs) உள்ளனர்.இந்த இடமாற்றங்கள் பெப்ரவரி 13 மற்றும் 18 ஆம் திகதிகளில் இரண்டு கட்டங்களாக அமுலுக்கு வரவுள்ளன.

கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் இருந்து கணிசமான எண்ணிக்கையிலான பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் சேவை தேவைகளின் அடிப்படையில் பொது கடமைகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயுதம் தாங்கிய பாதாள உலக கோஷ்டியின் செயற்பாடுகள் அண்மைக்காலமாக மோசமடைந்து வருகின்றன.கடந்தகாலங்களில் அரசியல்வாதிகளின் பின்னணியில் இயங்கிய இந்த ஆயுதக்குழுக்கள் இந்த ஆட்சியின் கீழும் தாராளமாக இயங்குவதுதான் வியப்பாக இருக்கிறது. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தனது ரி- 56 ரக துப்பாக்கியை பாதாள உலக கோஷ்டியிடம் 35 ரவைகளுடன் விற்றுவிட்டு டுபாய்க்கு சென்றுள்ள செய்தி அண்மையில் வெளியானது. அதேபோல் பாதாள உலக கோஷ்டியின் முக்கிய புள்ளி ஒருவரை விடுதலை செய்ய சதி வேலை செய்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் டுபாய் தப்பிச் சென்ற தகவலும் சில காலங்களுக்கு முன்னர் வெளியானது. இப்படியாக குற்றச் செயல்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான தொடர்பு இன்று நேற்றல்ல நீண்ட காலம் உள்ளது.

ஆனால் பொலிஸாரை இடமாற்றம் செய்வதோ அல்லது பொலிஸார் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதோ இந்த குற்றச் செயல்களுக்கு தீர்வாகாது. அப்படியான செயற்பாடுகள் ,பொலிஸார் சில விடயங்களை இரகசியமாக ,பிடிபடாமல் செய்வது எப்படி என்று அவர்களை சிந்திக்கத் தூண்டும்.

பணத்துக்கு கொலை செய்யும் கொலையாளிகள், பாதாள உலகத்துக்கு ஒத்துழைக்கும் பாதுகாப்புத்துறை உத்தியோகத்தர்கள் பிணையில் வெளியே வர முடியாதவாறு நீண்டகாலம் சிறைத்தண்டனை அனுபவிக்கும் வகையில் சட்டதிட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இப்படியான கொலைகளுக்கு ஆட்சியாளர்களை சாடுவதை விட எந்த ஆட்சியாளர்கள் வந்தாலும் சட்டம் ஒழுங்கு இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதைப்போன்று கடுமையான சட்ட ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

ஒருமாத காலத்துக்குள் 13 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றது என்று கூறப்படும் விடயத்தை சாதாரண ஒரு விவகாரமாக கடந்துசெல்ல முடியாது.பாதுகாப்புத்துறையினர் பயன்படுத்தும் துப்பாக்கியே இந்த சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது சமூகத்தில் பெரும் அச்சத்தை தருகிறது. இதற்கு மேலும் இந்த சம்பவங்களை சாதாரண சம்பவங்களாக அரசு கருதி விட முடியாது,கருதவும் கூடாது.

## இன்றைய நாளில்..

* 1322 – இங்கிலாந்தின் எலி நகரப் பேராலயத்தின் கோபுரம் இடிந்து வீழ்ந்தது.
* 1914 – பொன்னம்பலம் அருணாசலத்துக்கு சேர் பட்டம் பக்கிங்ஹாம் அரண்மனையில் வழங்கப்பட்டது.
* 1931 – பிரித்தானிய இந்தியப் பேரரசு தனது தலைநகரை கொல்கத்தாவிலிருந்து புதுடில்லிக்கு நகர்த்தியது.
* 1985 – கொக்கிளாய் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் அழிக்கப்பட்டது.
* 1996 – நேபாளத்தில் மாவோயிசப் பொதுவுடைமைவாதிகளால் நேபாள மக்கள் புரட்சி ஆரம்பிக்கப்பட்டது.
* 2004 – அண்டவெளியின் மிகப்பெரிய வைர, வெண்குறு விண்மீன் பி.பி.எம்.-37093 கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.
* 2017 – தென்கொரியத் தலைவர் கிம் ஜொங்-உன்னின் சகோதரர் கிம் சோங்-நம் கோலாலம்பூர் பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.



# வாழ்வதில் இருக்கிறது வாழ்க்கை

-கிருங்கை சேதுபதி-

தொகுப்பாய்ப் பல குடும்பங்கள் வாழும் பெரியதொரு அடுக்ககத்தில் ஒரு பொதுவிழா. வழக்கமான பட்டிமன்றம், வழக்காடு மன்றம், சிரிப்புச் சொற்பொழிவு எதுவுமில்லாமல் எல்லோருக்கும் மகிழ்வுதரும் ஒரு நிகழ்வாகப் பொதுக் கலந்துரையாடல் நிகழ்வை ஏற்பாடு செய்து நடுவர் என்ற பொறுப்புக்கு மறுதலையாக- இணைப்பாளராக இருப்பது என் பணி.

சில கேள்விகள், சிந்தனைகள், அனுபவ விளக்கங்கள் கொண்டு சில சிக்கல்களுக்குத் தீர்வுகள் என்பதாக விரியும் இந்தக் கலந்துரையாடல் நிகழ்வில் பார்வையாளர்கள் எவரும் பங்கேற்கலாம் என்பது பொது விதி.

‘இப்போது கூட்டுக் குடும்பம் சாத்தியமா?’ என்கிற பொது வினாவுக்குப் பதிலளிக்க வந்த ஒருவர் ‘தனது குடும்பம் கூட்டுக் குடும்பம்’ - என்று சொன்னார். பலத்த கரவொலி. ஓய்ந்தபின் என் கேள்வி. ‘உங்கள் குடும்ப உறுப்பினர்கள் யார்? யார்?’ அவரது பதில், ‘நான், என் மனைவி, மகள்’. மீண்டும் கரவொலி. அப்போதுதான் நானும் ஒரு புதுத் தகவலைப் புரிந்து கொண்டேன். இக்காலத்தில் கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ்ந்தாலே அதுதான் கூட்டுக் குடும்பம். கூடவே, வாரிசுகளும் இருந்தால் அது பெரிய குடும்பம்.

சுற்றம் சூழ வாழ்ந்த அக்காலக் கூட்டுக் குடும்பங்களின் பொதுத்தன்மையை இவர்களால் கற்பனை செய்துகொள்வது கூட முடியாது. ஆனாலும், ஓர் ஆறுதல். ஒருவகையில் ஒரு பொது கூட்டுக் குடும்பமாக இத்தகு அடுக்காக வாழ்க்கை அமைந்திருக்கிறது.

இதுவும் ஒருவகையில் சமத்துவபுரம்தான். இதற்குள்ளும் ஜாதி இருக்கிறது. மதம் இருக்கிறது. பொருளாதார நிலை வேறுபாடு இருக்கிறது. எப்படிப்பட்ட தனித்துவமிருந்தாலும் அவற்றுக்குள் ஒரு பொதுத்துவம் தோன்றிவிடுவது இயற்கை. அதுபோல், ஒரு பொதுநிலைக்குள் ஒரு தனிநிலை உருவாகிவிடுவதுமுண்டு.

ஒரு புதிய அனுபவம் அன்று எனக்கு வாய்த்தது. சிற்றூர்களில், குறு நகரங்களில் கூட்டுக் குடும்ப வாழ்க்கையில், மாமனார், மாமியார், நாத்தனார், கொழுந்தனார் உள்ளிட்ட உறவுகளோடு கூடி வாழ்ந்துவிட்டு, இப்போது தன் மகள், மகனுடன் இத்தகு கூட்டு வாழ்க்கையில் ஒடுங்கிவிடுகிற முதுமையாளர்களின் உணர்வுகளை, மெய்ப்பாடுகளைத் தெரிந்துகொள்ள முடிந்தது. முந்தைய கூட்டுக் குடும்பமென்பது ஒரு பல்கலைக்கழகம் போல பரந்து விரிந்தது. அது கூடி வாழ்ந்த கூட்டு வாழ்க்கை. தற்போதையது ஒரு கூண்டுக்குள் அடைபட்ட தனி வாழ்க்கை.

வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொள்கிற மனநிலையாளர்களுக்கு இதுவொரு வரம். கற்றுக்கொடுக்க வேண்டும் என்ற கருத்துடையோருக்கு இது ஒரு சவால்.

இந்த நிலையில் பிள்ளைகளின், பேரக் குழந்தைகளின் மனப்போக்கைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப தம்மை மாற்றிக்கொள்வது புத்திசாலித்தனம் என்று உணர்ந்துகொள்பவர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள். இன்னமும் தன் முந்தைய தகுதிப்பாட்டை வைத்துக்கொண்டு அறிவுரை சொல்கிறவர்களை அலட்சியம் செய்துவிடுகிறார்கள். அது உடல்சார் பிணிகளைவிட, மனம் சார்ந்த நோய்களை உற்பத்தி செய்துவிடுகிறது.

நிதிநிலை சார்ந்த நெருக்கடிகள் கசப்பான வார்த்தைகளைக் கக்கவைத்து விடுகின்றன. திட்டமிட்ட கடமைகளை நிறைவேற்ற முடியாமல் எதிர்பாராது வரும் நேர நெருக்கடிகள், சொற்களில் சூடேற்றிவிடுகின்றன. பொசுங்கிப்போகிறது மனம். சொன்னவர்களுக்கு வருத்தம். கேட்டவர்களுக்குத் துன்பம். பொறுத்துக்கொள்ள முடியாதவர்களுக்கும் பொறுத்துக் கொண்டிருப்பவர்களுக்குமிடையில் நேரும் தர்மசங்கடம் இருக்கிறதே, அது சில புதிய சிக்கல்களையும் உருவாக்கிவிடுகிறது. வாழ்ந்த காலத்து நினைவுகளில் மூழ்கிப் போகிறபோது வாழும் காலத்து நிகழ்வுகள் மங்கிப் போகின்றன. இருக்குமிடம், கிழமை, பொழுது, உறவுகள் எல்லாமும் மறந்துவிடுகின்றன. இந்த அனுபவங்களை இடைப்பட்ட வயதினர் நுட்பமாகக் கற்றுக் கொண்டுவிட்டால் மிகவும் நல்லது.

இத்தகு நிலைகளில் சிக்கிக் கொள்ளாமல் விடுபட்டுக்கொள்ள வழிவகை தேடும் கருத்தாக்கங்களை அவரவர் அனுபவத்தின்வழி பெறுவதற்கான உரையாடலைத் தொடங்கினேன். அது சின்னச் சின்ன கேள்விகளில் மெல்லத் தொடங்கியது. ‘காலையில என்ன சாப்பிட்டீங்க?’

பொதுவெளியில் அறிமுகமில்லாத ஒரு புதிய மனிதரின் கேள்விக்கு விவரமறியாத பாப்பா விழித்துக்கொண்டு பெற்றோரைப் பார்க்குமே, அப்படி ஒரு பார்வை அவர்களையும் அறியாமல், தன் மகள் அல்லது மருமகள் பக்கம் போனது.

அதுபோல், மற்றுமொரு கேள்வி, ‘போன விடுமுறைக்கு எங்கே போனீங்க?’ இதற்கு அவர்களின் பார்வை, தன் மகன் அல்லது மருமகன் பக்கம் போனது.

நினைவு மறதியும் ஒரு காரணம் என்று சொல்லாமலே புரிந்துகொள்ளலாம். அப்படி ஒரு குழந்தையாய், தன்னை உணர்கிற தேவை அவர்களுக்கு அவசியம் தேவை. தானே புரிந்துகொண்டு அந்த நிலைக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்பவர்கள் இருக்கிறார்கள். அல்லது காலம் அவர்களை அந்த நிலைக்கு உட்படுத்திவிடுகிறது. இதை பெரியவர்களைக் காட்டிலும், வீட்டில் இருப்பவர்கள் புரிந்துகொண்டுவிட்டால், அந்த வீட்டில் அமைதியின் நடனம் அற்புதமாய் இருக்கும்.

சாமர்த்தியம் மிகுந்த பெரியவர்களிடமிருந்து அப்போது நான் உணர்ந்து கொண்ட உண்மைகள் பலருக்கும் பாடங்களாய் அமைபவை.

விதிமுறைகள் நன்றாகத் தெரிந்த அம்மாவுடன் விதிமுறைகள் கற்று விளையாடத் தொடங்கும் சிறு குழந்தையின் ஆர்வம் இருக்கிறதே, அதுபோன்ற நிலைப்பாடு அது. தன் காலத்தில் கிட்டாத கைப்பேசிக் கருவியின் நுட்பங்களைத் தன் பேரப்பிள்ளைகள் வழி பெரியவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். தன் காலத்தில் கிட்டாத பல வாழ்வியல் அனுபவங்களையும் கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கிறது.

தெரிந்தே தோற்று, தன்னை வெற்றிபெற வைக்கும் அம்மாவின் தியாகம் அப்போது புரியாது பிள்ளைக்கு. அந்த மகிழ்ச்சிக்கு என்ன கொடுத்தாலும் தகும் என்பதை நுண்ணியதாய் உணர்ந்த அம்மா, தன் தியாகம் ஒடுக்கி, அறிவறிந்த அறியாமையில் பெறும் ஆனந்தம் இருக்கிறதே, அது ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் பழைய குறுகிய ஆனந்தம்.

அதுபோல், எந்தத் தந்தையின் வெற்றியும் முதலில் தன் சொந்த மகனிடம் தோற்றுப்போவதே என்பதைப் புரிந்துகொள்வது ஒரு பக்குவம். இது படிப்பறிவுக்குக் கிட்டாத பாடம். பட்டறிவு தருகிற ஞானம்.

தன்முனைப்பாகிய ‘ஈகோ’வைத் தொலைக்கும் இடம் வீடாக இருக்க வேண்டும். ‘குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை’ என்று அதனால்தான் சொல்லப்பட்டது. அதற்காக, வீடென்பது குற்றங்களின் கூடாரம் ஆகிவிடக்கூடாது. அங்கே நிகழும் தவறுகளைக் குற்றங்கள் ஆகிவிடாமல் முன்னறிந்து காத்துக்கொள்வதில்தான் வாழும் கலை உள்ளது.

ஒவ்வொரு வீடும், ஒரு நாட்டுக்கான குறும்படைப்புத்தான். அதற்கென்று அரசன், அரசி, அமைச்சன், பணியாள், பரிவாரங்கள் உண்டு. தனித்துவம் கெடாமல் கூடி வாழும் கலையைக் கற்றுக் கொடுக்கும் கூடாரம் வீடு.

தன் வீட்டில் தனக்கான இடம் எது என்பதைக் கற்றுக்கொள்வது முதற்பாடம். அது புறத்தேவைகளுக்கான இடம் மட்டுமன்று. அகத்தளவில் அவ்வீட்டில் தான் யாராக இருக்கிறோம் என்பதை முதலில் உணர்ந்துகொள்வதையும் அதனை முதலில் உணர்த்திவிடுவதிலும் இருக்கிறது தொடக்கநிலைக் கல்வி.

தன்னளவில் யாரும் மன்னர்தான். மகாராணிதான். பொதுவாழ்வில் அவர்கள் சில இடங்களில் மந்திரிகளாக இருக்கலாம். தளபதிகளாய்த் திகழலாம். தொண்டர்களாய் வாழலாம். ஆனால், குடிமக்கள் என்பதில் உறுதியாய் இருக்க வேண்டும். இந்த நிலைப்பாடுகளைச் சரியான வகையில் நியதிப்படுத்தத் தெரியாத நேரங்களில், இடங்களில்தான் சிக்கல்கள் நேருகின்றன.

தன் அலுவலகத்தில் எத்தகு உயர்பதவியில் ஒருவர் இருந்தாலும், ஓடும் பஸ்ஸில் ஏறிப் பயணிக்கும்போது, நடத்துநருக்கு முன் அவர் ஒரு பயணி. அவ்வளவுதானே? மருத்துவருக்கு முன் ஒரு நோயாளி. ஆசிரியருக்கு முன் ஒரு மாணவன். தந்தைக்கு முன் பிள்ளை. இப்படிச் சூழலுக்கேற்ப அமையும் பாத்திரத்தன்மைகளை உணர்ந்து அதற்கான நியதிகளைக் கடைப்பிடிக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதை சைவ உணவு உண்ணும் மூத்தவர், கிராமத்துப் பெரியவர், ‘பாம்பு தின்கிற ஊருக்குப் போனால் நடுத்துண்டம் நமக்கு என்று உட்கார்ந்துவிட வேண்டும்’ - என்றார்.

சிறு வயதில் கிடைக்கும் சலுகைகளை, வசதிகளைக் கடைசி வரைக்கும் எதிர்பார்க்கும் உள்ளம் சவலைத் தன்மை உடையது. அதிலிருந்து பெரியவர்கள் தம்மை விடுவித்துக்கொள்ளவேண்டியது அவசியம் .

இப்போது, பெரியவர்களுக்கான நிலைப்பாட்டை சிறுவர் சிறுமியர் எடுத்துக் கொள்கிறார்கள். ‘அது அப்படியில்லே தாத்தா’, ‘இது இப்படித்தான் பாட்டி’ என்று மழலை மொழியில் புதிய வாழ்க்கைப் பாடம் நடத்துகிறார்கள்.

நவீன வாழ்க்கையை நவீன முறையில் எதிர்கொள்வது நவீன மனிதர்களால்தானே முடியும்? மிகுதியும் இயந்திரங்களோடு பழகி, இயந்திரமயமாகிப் போன வாழ்வில் இதயங்கள் கொண்ட மனிதர்களாக இருப்பதில் பல சிக்கல்கள் இருக்கத்தான் செய்கின்றன என்பதை இதயபூர்வமாக உணர்ந்துகொண்டால் எல்லாம் எளிதாக-இனிமையாக இருக்கும் என்பது தெளிவானது.

எழுதுவதிலும் பேசுவதிலும் பார்ப்பதிலும் இல்லாத வாழ்க்கை, வாழ்வதில் இருக்கிறது. உலகம் பலவிதம். அதில் ஒவ்வொருவரும் ஒரு தனி ரகம். ‘ஒரு மனிதன் ஒரு வீடு ஓர் உலகம்’ என்று எழுத்தாளர் ஜெயகாந்தனும் ‘லீலை இவ்வுலகு’ என்று மகாகவி பாரதியும் சும்மாவா சொன்னார்கள்?

நன்றி - தினமணி

## நக்கல் நமசிவாயம்

இனி டாக்டர் அர்ச்சுனாவுக்கு பார்லிமென்ட் எம்.பிக்கள் பயப்படப்போறாங்கள்..!



## மக்கள் கடிதம்

வாசகர்களே!

உங்கள் பகுதியில் நிலவும் குறைபாடுகள், தேவைகளை சுட்டிக்காட்ட நாங்கள் இடம் தருகிறோம். தட்டச்சு செய்தோ, எழுத்து மூலமாகவோ அவற்றை நீங்கள் எமக்கு அனுப்பலாம். அவற்றை பிரசுரிப்போம்.

ஆசிரியர்,
மக்கள் கடிதம், தமிழன் பத்திரிகை நிறுவனம்,
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
அல்லது thamilaneditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.

# கடந்த அரசாங்கங்களால் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்ட நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்ய முடிவு

கடந்த அரசாங்கங்களின் காலத்தில் இடைநடுவில் கைவிடப்பட்ட வேலைத்திட்டங்களின் நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்துக்குட்பட்ட பல பிரதேச மட்டங்களில் இத்தகைய வேலைத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக துறைசார் பிரதியமைச்சர் ருவன் செனவிரத்ன கூறினார்.

பாலங்கள், வளைவுகள் மற்றும் கிராமப்புற வீதிகள் உள்ளிட்ட பல வேலைத்திட்டங்கள் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த வேலைத்திட்டங்களுக்கான நிர்மாணப் பணிகள் உரிய திட்டமிடலின்றி ஆரம்பிக்கப்பட்டமையால் அவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டிலும் சிக்கல் எழுந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

வேலைத்திட்டங்கள் முடிவுறுத்தப்படாமையால் அவற்றின் பலனைப் பெற்றுக்கொள்ளவிருந்த மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஆராய்ந்து எதிர்வரும் வரவு - செலவுத்திட்டத்தினூடாக இடைநடுவில் கைவிடப்பட்ட அனைத்து வேலைத்திட்டங்களையும் நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வாதுவை பொலிஸ் நிலையம் முன்பாகப் போராட்டம்

# பொலிஸாரின் தாக்குதலில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

## நான்கு கான்ஸ்டபிள்கள் பணி நீக்கம்



வாகன விபத்துச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட இளம் குடும்பஸ்தர் இரத்த வாந்தியெடுத்து உயிரிழந்த நிலையில், நேற்று முன்தினம் (11) வாதுவை பொலிஸ் நிலையம் முன்பாக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், இறந்தவரைத் தாக்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் வாதுவை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த நான்கு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் நேற்று (12) மதியம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாணந்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் உத்தரவின் பேரில் நடத்தப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து பாணந்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் நான்கு கான்ஸ்டபிள்களையும் கைதுசெய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். அதன்படி, அவர்கள் இன்று (13) பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட வுள்ளனர்.

சம்பந்தப்பட்ட நான்கு கான்ஸ்டபிள்களும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வாகன விபத்துச் சம்பவம் தொடர்பில் வாதுவை பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட ஒரு குழந்தைக்குத் தந்தையான 24 வயதுடைய ஆர்.எம். சமித டில்ஷான் என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு பொலிஸ் தாக்குதலில் உயிரிழந்தவராவார்.

கைதுசெய்யப்பட்ட இளம் குடும்பஸ்தர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டு வீடு திரும்பும்போது இரத்த வாந்தி எடுத்துள்ளார். இதனையடுத்து அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டவரின் மனைவி கூறும்போது, தனது கணவர் பொலிஸார் தன்னைத் தடியால் கடுமையாகத் தாக்கியதாகவும் நெஞ்சு வலிக்கிறது என்றும் கூறியதாகத் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் உயிரிழந்தவரின் மனைவி ரோஷினி லக்மாலி பாணந்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இரத்த வாந்தி எடுத்த நிலையில், மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். பின்னர் அவர் இறந்துவிட்டதாக ஊடகங்களிடம் இறந்தவரின் மனைவி கூறினார்.

இதேவேளை, பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்ததாகத் தெரிவித்து, பொலிஸ் நிலையத்தின் முன்பும் அதைச் சுற்றியும் சுமார் 40 பேர் கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தையடுத்து வாதுவை பொலிஸாரின் பிரதான நுழைவாயில் வீதித் தடைகளினால் முற்றாக அடைக்கப்பட்டிருந்ததுடன், கிட்டத்தட்ட 20 அதிகாரிகள் கொண்ட குழு பிரதான வீதியை மறித்து பாதுகாப்பைப் பலப்படுத்தியிருந்தமை குறப்பிடத்தக்கது.

# எல்ல ஒடிசி ரயிலில் மோதி ஒருவர் பலி



(ராமு தனராஜா)

எல்ல நானுஓயா ஒடிசி ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

நானுஓயாவிலிருந்து பதுளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஒடிசி ரயிலில் ஹாலிஎலைக்கும் பதுளைக்குமிடைப்பட்ட பகுதியில் குறித்த நபர் மோதி உயிரிழந்துள்ளார்.

சடலம் பதுளை ரயில் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் உயிரிழந்தவர் அடையாளம் காணப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் 40 வயது மதிக்கத்தக்கவரெனவும் மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3000 அரிசி மூடைகள் பறிமுதல்

கொழும்பு, புறக்கோட்டையிலுள்ள களஞ்சியசாலையொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 5 கிலோ நிறையுடைய 3,000 அரிசி மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நுகர்வோர் விவகார அதிகார சபைக்குக் கிடைத்த தகவலினடிப்படையில் நேற்று (12) மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்த அரிசி மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ரமழான் பண்டிகையை முன்னிட்டு சந்தைகளில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காகக் மேற்பி அரிசித்தொகை பதுக்கிவைக்கப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மைதானம் இல்லாது சிரமப்படும் வவுனியா விபுலானந்தா கல்லூரி





விளையாட்டு மைதானம் இல்லாதபோதும் இவ்வருடத்துக்கான விளையாட்டுப் போட்டியை வவுனியா தெற்கு கல்வி வலய பாடசாலைகளில் ஒன்றான வவுனியா விபுலானந்தா கல்லூரி ஆரம்பித்துள்ளது.

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் அமைந்துள்ள விபுலானந்தா கல்லூரியில் 2000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றபோதும் அதற்கான ஒரு நிரந்தர மைதானம் இதுவரை இல்லை என்பது கவலைக்குரிய விடயம். மைதானத்துக்கான நிலம் ஒன்றைக் கொள்வனவுசெய்ய நீண்ட நாட்களாக பழைய மாணவர்கள், பெற்றோர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றபோதும் இதுவரை அது கைகூடவில்லை.

இவ்வாறான நிலையில், கல்வியமைச்சின் சுற்றறிக்கைக்கமைவாக மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஒன்றான விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள குறித்த பாடசாலை இவ்வாண்டுக்கான இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியின் முதல் நிகழ்வாக மரதன் ஓட்டப் போட்டியை நேற்று (12) நடத்தியது.

குறித்த மரதன் ஓட்ட நிகழ்வை பாடசாலையின் முதல்வர் திருமதி ஞானமதி மோகனதாஸ் ஆரம்பித்து வைத்தார். பாடசாலை முன்றிலில் ஆரம்பித்த மரதன் ஓட்டம் வைரவபுளியங்குளத்தை அடைந்து, அங்கிருந்து வவுனியா நகர மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியைச் சென்றடைந்து, யாழ். வீதியூடாகச் சென்று பண்டார வன்னியன் சதுக்கத்தையடைந்து, அங்கிருந்து மன்னார் வீதியூடாக நெளுக்குளம் சந்தியை அடைந்து, மீண்டும் வேப்பங்குளம் ஊடாக பாடசாலை முன்றிலில் நிறைவடைந்தது.

இதில் ஆண், பெண் என 58 மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தனர். அத்தோடு, பல பாடசாலைகளில் மைதான வசதியிருந்தும் இவ்வருடத்துக்கான விளையாட்டு நிகழ்வுகளை இன்னும் ஆரம்பிக்காத நிலையில் மைதானம் இல்லாத விபுலானந்தாக் கல்லூரி விளையாட்டுப் போட்டியின் முதல் நிகழ்வான மரதன் ஓட்டத்தை நிறைவு செய்துள்ளமையால் அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளது.

மரதன் ஓட்ட நிகழ்வில் பெண்கள் பிரிவில் லதுர்சி செல்வகுமார் முதலாமிடத்தையும் வர்ணஜா தட்சணாமூர்த்தி இரண்டாமிடத்தையும் செந்தீபி குணசேகரம் மூன்றாமிடத்தையும், ஆண்கள் பிரிவில் கனகராஜன் கவிஷன் முதலாமிடத்தையும் ராசகுமார் ஸ்ரீராம் இரண்டாமிடத்தையும் பிரகாஷ் டில்ஷான் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர். இதன்போது மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்கு உற்சாகமளித்தமை குறிப்பிடத்தக்கது.

# கட்டிடமொன்றிலிருந்து கீழே தள்ளி தவுலகலயில் நபரொருவர் கொலை

## சகோதரர்கள் இருவர் கைது

(எம்.ஏ.அமீனுல்லா )

உயரமான கட்டிடத்திலிருந்து கீழே தள்ளப்பட்டு ஒருவர் கொல்லப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் தவுலகல, முருதகஹமுல ,வராஹந்தெனிய பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அப்துல் காதர் கலிலுர் ரஹ்மான் (52) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் (11) இரவு 11.30 மணியளவில் குடும்பத் தகராறைத் தீர்க்க தனது தந்தை சந்தேக நபர்களின் வீட்டுக்குச் சென்றதாகவும் அப்போது சந்தேக நபர்கள் இருவரும் தந்தையை தாக்கி சுமார் ஆறடி உயரத்திலிருந்து கீழே தள்ளிவிட்டதாகவும் உயிரிழந்தவரின் மகளான பாத்திமா பஸ்லா (வயது 19) தவுலகல பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சரிவிலிருந்து கீழே விழுந்து கீழேயுள்ள கொங்கிரீட் வீதியில் தலை அடிபட்டு பலத்த காயங்களுடன், தந்தை பேராதனை போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக அவர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

தவுலகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரியந்த திஸாநாயக்க தலைமையில் விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.

# அதிபரொருவரின் விடுதியை உடைத்து பெறுமதியான பொருட்கள் திருட்டு

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு விளக்கமறியல்

(பொகவந்தலாவ நிருபர்)

பொகவந்தலாவ, கொர்க்கஸ்வோல்ட் இல. 02 தமிழ் வித்தியாலயத்தின் பிரதி அதிபருக்கு வழங்கப்பட்ட விடுதியை உடைத்து மடிகணினி, தங்க ஆபரணங்கள் மற்றும் எரிவாயு சிலிண்டர் என்பவற்றைத் திருடிய தந்தை, தாய், மகன் ஆகியோரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட 15 வயது சிறுவனை சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்குமாறும் ஹட்டன் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஹட்டன் நீதவான் முன்னிலையில் சந்தேகநபர்கள் நேற்று (12) முன்னிலைப்படுத்தப்பட்டபோதே நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்தத் திருட்டுச் சம்பவத்தில் தொடர்புடைய சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் (11) கைதுசெய்யப்பட்டதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர். பாடசாலைகளுக்கு இரண்டாம் தவணை விடுமுறை வழங்கப்பட்ட காலப்பகுதியில் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த பொகவந்தலாவ பொலிஸார் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பொகவந்தலாவ,கொர்க்கஸ்வோல்ட் மேல்பிரிவுத் தோட்டப் பகுதியிலுள்ள வீடொன்றை சோதனையிட்டபோதே குறித்த வீட்டிலிருந்து மேற்குறிப்பிட்ட பொருட்கள் மீட்கப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக 2025இல் 3 இலட்சம் பணியாளர்கள்

## அனுப்ப எதிர்பார்ப்பதாக வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிப்பு

2025 ஆம் ஆண்டில் 3 இலட்சத்து 40 ஆயிரம் இலங்கையர்களை வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக அனுப்ப எதிர்பார்ப்பதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களுக்குத் தெளிவூட்டுவதற்காக தொடர் நிகழ்ச்சித் திட்டங்களின் முதலாவது நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றிய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கோசல விக்கிரமசிங்க இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டில் சுமார் 3,14,000 இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்றனர். அதன்படி, 2024 ஆம் ஆண்டில் புலம்பெயர்ந்த தொழிலாளர் பணம் அனுப்புதலில் 6.51 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறப்பட்டதாக இந்நிகழ்வில் உரையாற்றிய பணியகத்தின் பொது முகாமையாளர் டி.டி.பி. சேனநாயக்க தெரிவித்துள்ளார்.2024 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்ற தொழிலாளர்களில் 65% பேர் தொழில்முறை வேலைகளுக்கும் 35% பேர் குறைந்தபட்ச தொழில்முறை வேலைகளுக்கும் சென்றதாக பொது முகாமையாளர் மேலும் கூறியுள்ளார்.

# புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பு

## பிரச்சினைகள் குறித்து கவனஞ்செலுத்துவதாக ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு

விஜயத்தினம் சரவணன்





முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மக்கள் குறைகேள் சந்திப்புகளை நடத்தி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அவர்களது குறைபாடுகளையும் கேட்டறிந்துகொண்டார்.

குறிப்பாக, வள்ளுவர்புரம், இளங்கோபுரம், பாரதிபுரம், மூங்கிலாறு, வெள்ளப்பள்ளம் ஆகிய பகுதிகளிலேயே பாராளுமன்ற உறுப்பினரால் இவ்வாறு மக்கள் குறைகேள் சந்திப்புகளை நடத்தியுள்ளார்.

அந்தவகையில், வள்ளுவர்புரம் பகுதியில் கடந்த 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் அப்பகுதி மக்கள் சந்தையாகப் பயன்படுத்தி வந்த கட்டிடத் தொகுதியை விசுவமடு கூட்டுறவுப் பகுதியினர் அபகரித்து வைத்துள்ளதாக இதன்போது அப்பகுதி மக்களால் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதுடன், இவ்வாறு சந்தைக்கட்டிடம் அபகரிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் தமது உள்ளூர் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன், பாடசாலைக்கான தேவைகள், பாடசாலை மைதானச் சீரமைப்பு, கமநல வங்கியால் வழங்கப்படும் 10,000 ரூபா விவசாயக் கடனை அதிகரித்தல் உள்ளிட்ட கோரிக்கைகளும் மக்களால் பாராளுமன்ற உறுப்பினரிடம் முன்வைக்கப்பட்டன.

இளங்கோபுரம் பகுதியில் இடம்பெற்ற மக்கள் குறைகேள் சந்திப்பில் மிகமுக்கியமாக இளங்கோபுரம் கிராமத்தை தனிக் கிராம அலுவலர் பிரிவாக்குதல், வனவளத் திணைக்களத்தின் பிடியிலுள்ள காணியை விடுவித்தல், யானைவேலி அமைத்தல், நஞ்சுண்டான் குளத்தைச் புனரமைத்தல் கிராமத்தின் நடுவேயுள்ள காட்டைத் துப்புரவுசெய்தல், பொதுநோக்குமண்டபம் அமைத்தல் உள்ளிட்ட விடயங்கள் மக்களால் பாராளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கையாக முன்வைக்கப்பட்டன.

அதேவேளை, பாரதிபுரம் பகுதியில் இடம்பெற்ற மக்கள் குறைகேள் சந்திப்பில், பாரதிபுரம் கிராமத்திலுள்ள 350குடும்பங்குக்கு மேற்பட்டோர் பயன்படுத்தும் பாரதிபுரத்தையும் மாணிக்கபுரத்தையும் இணைக்கும் சுமார் 2.5கிலோமீற்றர் தூரமான மஞ்சள்பால வீதியையும் மஞ்சள்பாலத்தையும் சீரமைத்தல் உள்ளிட்ட விடயங்கள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

மூங்கிலாறு பகுதியில் இடம்பெற்ற மக்கள் குறைகேள் சந்திப்பில், குறித்த பகுதிகளில் திருட்டுகள் அதிகரித்துக்காணப்படுவதாகவும் அதிலும் குறிப்பாக, கால்நடைத்திருட்டுகள் அதிகரித்துக்காணப்படுவதாகவும் இத்தகைய திருட்டுகளைக் கட்டுப்படுத்துமாறும் மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அத்தோடு, சட்டவிரோத மரக்கடத்தல், மணல் கடத்தல் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தல், மூங்கிலாறு வைத்தியசாலையில் காணப்படும் வைத்தியர், தாதியர் வெற்றிடங்களைப் பூர்த்திசெய்தல், மானிய உரத்துக்கான பணம் வழங்கப்படாமை, உடையார்கட்டு விவசாய போதனாசிரியர் தனது கடமைகளை முறையாகச் செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு, கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளும் குறைபாடுகளும் பாராளுமன்ற உறுப்பினரிடம் இதன்போது மூங்கிலாறு பகுதி மக்களால் முன்வைக்கப்பட்டது.

வெள்ளப்பள்ளம் பகுதியில் இடம்பெற்ற குறைகேள் சந்திப்பில் அதிகரித்துள்ள கசிப்பு உற்பத்தி மற்றும் போதைப்பொருள் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல், வீதிவிளக்குகளை அமைத்தல் உள்ளிட்ட கோரிக்கைகள் பாராளுமன்ற உறுப்பினரிடம் முன்வைக்கப்பட்டன.

மேலும் இவ்வாறு மக்கள் குறைகேள் சந்திப்புகளை நடத்திய அனைத்துக் கிராமங்களிலும், மாணிக்கபுரம் கிராமத்திலும் பாதிக்கப்பட்டுள்ள பிரதான மற்றும் உள்ளக வீதிகளையும் பாலங்களையும் சீரமைத்துத்தருமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இதன்போது மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட வீதிகளை நேரடியாகவும் மக்களோடு இணைந்தும் பார்வையிட்டிருந்தார்.

இந்நிலையில், மக்களின் குறைபாடுகளையும் பிரச்சினைகளையும் கேட்டறிந்த பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கிராம மக்களிடம் மகஜர்களையும் பெற்றுக்கொண்டதுடன், மக்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள், குறைபாடுகள் தொடர்பில் கூடிய கவனஞ்செலுத்துவதாகவும் தெரிவித்திருந்தார்.

www.thamilan.lk
வியாழக்கிழமை, பெப்ரவரி 13, 2025
தமிழன்

# குவைத் பிரதமரை சந்தித்தார் ஜனாதிபதி அநுர





2025 உலக உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஐக்கிய அரபு இராச்சியம் சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் குவைத் பிரதமர் ஷேக் அஹமட் அப்துல்லா அல் அஹமட் அல் சபாவுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் (11) பிற்பகல் இடம்பெற்றது.

தற்போது இலங்கையின் அரசியல் மற்றும் நிதி ஸ்திரத்தன்மை உறுதிசெய்யப் பட்டுள்ள நிலையில், முதலீடு மற்றும் சுற்றுலாத் துறைக்கான சாத்தியங்கள் விரிவடைந்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதன்போது சுட்டிக்காட்டினார்.

இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்தை வலுப்படுத்துவது மற்றும் சந்தையைப் பன்முகப்படுத்துவது குறித்து இரு தரப்பும் கவனம் செலுத்தியதுடன், அதற்கான புதிய உத்திகளைக் கண்டுபிடிக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு குவைத் அரசாங்கம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு குவைத் பிரதமருக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

குவைத்தில் சுமார் 1,55,000 இலங்கைப் பணியாளர்கள் இருப்பதாகவும் அவர்களிடமிருந்து 700 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அந்நியச்செலாவணியாக கிடைப்பதாகவும் இது இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பெரும் பலமாக இருப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஜனாதிபதியுடன் இந்த விஜயத்தில் இணைந்துகொண்டுள்ளார்.

# 139 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு 2 கட்டங்களில் இடமாற்றம்

சேவைத் தேவைகள் காரணமாக 139 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் (OIC) தேசிய பொலிஸ் திணைக்களத்தின் அனுமதியுடன் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையகத்தின்படி, இந்த இடமாற்றங்கள் இரண்டு கட்டங்களாக செயற்படுத்தப்படும். அதனடிப்படையில், இன்று (13) முதல் ஒரு குழுவும் பெப்ரவரி 18 முதல் மற்றொரு குழுவும் இவ்வாறு இடமாற்றம் பெறவுள்ளன.

பொலிஸ் சேவையின் செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட வழக்கமான சேவை மாற்றங்களின் ஒரு பகுதியாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# டவர் அரங்க நாடக மன்றத்தின் எதிர்பார்ப்பின் மேடை நிகழ்வு



டவர் அரங்க நாடக மன்றம் 05ஆவது தடவையாக ஏற்பாடுசெய்த 'எதிர்பார்ப்பின் மேடை நிகழ்வு' - டவர் நாடக விழா மருதானை டவர் அரங்கில் நேற்று முன்தினம் (11) ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். நாடகத்தை ரசிப்பதற்குத் தரமான பார்வை யாளர்களை உருவாக்குதல், நாடகக் கலைஞர் களின் வருமானத்தை அதிகரித்தல், நாடகத்தை ஊக்குவித்தல் மற்றும் நாடகம் தொடர்பாக பரந்த சமூக கலந்துரையாடல்களை உருவாக்குதல் போன்றவற்றை நோக்கமாகக்கொண்டு இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறை நாடக விழா தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெறும். இங்கு 14 முழு நீள நாடகங்கள், 12 குறு நாடகங்கள் மற்றும் 08 சிறுவர் நாடகங்கள் என மொத்தமாக 34 நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன.

நாடக விழா நடைபெறும் 10 நாட்களும் டவர் கலைஞர்கள் இருவர் வீதம் 20 பேருக்கு வாழ்நாளில் ஒரு தடவை மட்டும் வழங்கப்படுகின்ற 'டவர்' பாராட்டு விருது மற்றும் பணப்பரிசில்கள் வழங்கப்படும். இதில் முதல் விருது சிரேஷ்ட கலைஞர் விஜேரத்ன வரகாகொடவுக்கு பிரதமர் ஹரிணி அமரசூரியவால் வழங்கப்பட்டது.

# இலங்கை - அவுஸ்திரேலிய பாராளுமன்ற நட்புறவுச் சங்க இணைத் தலைவர்கள் தெரிவு





இலங்கை - அவுஸ்திரேலிய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் இணைத் தலைவர்களாக பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் (பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச்.அபயரத்ன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் ஆகியோர் அண்மையில் தெரிவுசெய்யப்பட்டனர்.

நட்புறவுச் சங்கத்தை மீள ஸ்தாபிப்பதற்கான கூட்டம் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ் (Paul Stephens) அதிதியாகக் கலந்துகொண்டதுடன், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது இலங்கை - அவுஸ்திரேலிய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டார்.

இங்கு உரையாற்றிய சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன குறிப்பிடுகையில்,

விசேடமாக இந்த ஆண்டு இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர தொடர்புகளின் 78ஆவது ஆண்டைக் குறிப்பதாகவும் மீள ஸ்தாபிக்கப்பட்ட நட்புறவுச் சங்கம் இலங்கை மற்றும் அவுஸ்திரேலியாவுக்கிடையிலான ஒத்துழைப்புகளை அதிகரிப்பதற்கான ஊக்கி யாகச் செயற்படும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இரு நாடுகளுக்குமிடையிலான இரு தரப்பு உறவுகள், அபிவிருத்தி ஒத்துழைப்புகள், பயங்கரவாதத் தடுப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு போன்ற துறைகளில் பரந்துபட்டுக் காணப்படுவதாக சபாநாயகர் தெரிவித்தார். அத்துடன், 2022ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார நெருக்கடியின்போது அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்கிய விலைமதிப்பற்ற ஆதரவுக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ், நட்புறவுச் சங்கத்தை மீள ஸ்தாபிப்பதற்கான கூட்டத்தை ஏற்பாடு செய்தமைக்கு சபாநாயகருக்கு நன்றி தெரிவித்ததுடன், புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையிலான நீண்டகால நட்புறவைச் சுட்டிக்காட்டிய அவர், இரு நாடுகளின் பாராளுமன்றங்களுக்கிடையிலான தொடர்பு மற்றும் ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகள் குறித்த நம்பிக்கையையும் வெளியிட்டார்.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட இணைத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தனது உரையில், இணைத் தலைவர்களாகத் தெரிவுசெய்தமைக்கு நன்றி தெரிவித்ததுடன், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் நம்பிக்கையை வெளியிட்டார்.

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கு மிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்திய அவர், அதற்காக உயர்ஸ்தானிகரின் தொடர்ச்சியான ஆதரவை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை மீள ஸ்தாபிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டியதுடன், இந்த முக்கியமான மற்றும் வரலாற்று ரீதியான நடவடிக்கை சட்டவாக்கம், பொருளாதாரம் மற்றும் வணிகத் துறைகள் போன்ற பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்குமிடையிலான நெருக்கமான உறவுக்கு வசதியளிக்கும் எனத் தெரிவித்தார்.

# பாராளுமன்ற நிர்வாகப் பணியாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் மருத்துவ முகாம்









பாராளுமன்ற நிர்வாகப் பணியாளர்கள் சங்கத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட மருத்துவ முகாம் நேற்று முன்தினம் (11) பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

பாராளுமன்றப் பணியாளர்கள், இணைந்த சேவைகளின் பணியாளர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் இந்த மருத்துவ முகாம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வில் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன, பாராளுமன்ற பதவியணித் தலைமை அதிகாரியும் பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன, பாராளுமன்ற நிர்வாகப் பணியாளர்கள் சங்கத்தின் தலைவர் பாலித்த பிரியங்கர, அதன் செயலாளர் புத்திகா அபேசிங்க உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

தொற்றாநோய்ப் பரிசோதனை, சிறுநீரகம், கண், பல் பரிசோதனைகள், ஆயுர்வேத மருத்துவம் மற்றும் ஊட்டச்சத்து ஆலோசனை, உளவள ஆரோக்கியம் ஆகிய துறைகளில் சிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகளுக்கான வசதிகள் இந்த மருத்துவ முகாமில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

# டுபாயில் தொழில் பெற்றுத்தருவதாகக் கூறி இருவரிடம் எட்டு இலட்சம் ரூபா நிதி மோசடி

## சந்தேக நபருக்குப் பயணத்தடை விதித்துப் பிணை

(ஹனபி எம் தாஸிம்)

டுபாயில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி இரண்டு நபர்களிடம் தலா 4 இலட்சம் ரூபா வீதம் எட்டு இலட்சம் ரூபாவை மோசடி செய்ததாகக் கூறப்படும் நபரொருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரை 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் நேற்று முன்தினம் (11) விடுவித்த மஹர எண்-01 நீதிவான் நீதிமன்ற நீதிபதி காஞ்சனா டி சில்வா ,வெளிநாட்டுப் பயணத் தடை விதித்ததுடன் விசாரணையை ஜூலை 08ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். அஸ்கிரி, உடுகம்பொல, வல்பொல பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் டுபாய் விசா வழங்குவதாகக் கூறி, வெலிசறை மற்றும் கடவத்தை பகுதிகளைச் சேர்ந்த இரண்டு பேரிடம் பணத்தைப் பெற்றுள்ளார்.

குறித்த சந்தேக நபர் கூறியதுபோலவே, அவர்கள் இருவரும் கிரிபத்கொடை நகரத்திலுள்ள ஒரு தனியார் வங்கிக் கிளையிலுள்ள வங்கிக் கணக்கில் பணத்தை வரவு வைத்திருந்தனர். ஆனால், இதுவரை அவர்களுக்கு விசா வழங்கவுமில்லை. பணத்தைத் திருப்பித் தரவுமில்லையென சந்தேகநபருக்கு எதிரான முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சபாநாயகரைச் சந்தித்தார் இலங்கைக்கான கியூபா தூதுவர்





இலங்கைக்கான கியூபா தூதுவர் ஆண்ட்ரேஸ் மார்செலோ கோன்சாலஸ் அண்மையில் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்னவைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

சபாநாயகருக்குத் தனது வாழ்த்துகளைத் தெரிவித்த கியூபா தூதுவர், இலங்கையுடனான ஒத்துழைப்புகளை மேலும் விஸ்தரிப்பதற்கு கியூபா தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துவதை நோக்காகக்கொண்டு பொதுச் சுகாதார முயற்சிகளுக்காக கியூபா அரசாங்கம் தற்பொழுது வழங்கிவரும் ஒத்துழைப்புகள் மற்றும் நிபுணத்துவ உதவிகளையும் அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

கியூபா பாராளுமன்ற சபாநாயகரின் வாழ்த்துச் செய்தி அடங்கிய கடிதத்தை கியூபா தூதுவர், சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்னவிடம் கையளித்தார்.

1959ஆம் ஆண்டுமுதல் ஆரம்பமான இலங்கைக்கும் கியூபாவுக்குமிடையிலான நீண்டகால உறவுகளை மீண்டும் நினைவு படுத்திய சபாநாயகர், இரு நாடுகளுக்கு மிடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதாகத் தெரிவித்தார்.

இலங்கையில் டெங்கு நோயை ஒழிப்பதற்கு கியூபா அரசாங்கம் வழங்கிவரும் ஒத்துழைப் புக்கும் சபாநாயகர் நன்றி தெரிவித்தார்.

அனைத்து இலங்கையர்களும் இன மத வேறுபாடுகளின்றி ஊழலற்ற, வளர்ச்சியடைந்த நாட்டை ஒன்றிணைத்து கட்டியெழுப்பும் நோக்கில் இலங்கை அரசாங்கம் அண்மையில் அறிமுகப்படுத்திய 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டம் குறித்தும் சபாநாயகர் எடுத்துக் கூறினார்.

அத்துடன், இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இலங்கை – கியூபா பாராளுமன்ற நட்புறவுச் சங்கம் மீண்டும் உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் அவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

# பொலிஸ் அதிகாரியின் காதைக் கடித்த திருடன்

## அநுராதபுரத்தில் சம்பவம்

யாத்திரிகர்களிடமிருந்து பணம் மற்றும் நகைகளைத் திருடிச்சென்ற திருடனை கைதுசெய்யச் சென்ற பொலிஸ் அதிகாரியின் காதை சந்தேக நபர் கடித்ததில், பொலிஸ் அதிகாரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம், உடமலுவ பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பொலிஸ் பரிசோதகரே இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர், அநுராதபுரம், ருவன்வெலிசேயவி லிருந்து ஸ்ரீ மகா போதிக்குச் செல்லும் பாதையில் சுற்றித் திரிவதாகத் தகவல் கிடைத்தது.

பொலிஸ் பரிசோதகர் அவரைக் கைதுசெய்ய முயன்றபோது, சந்தேக நபர் அவரது காதைக் கடித்துவிட்டார்.

இருப்பினும், சம்பவ இடத்துக்கு விரைந்த மற்றொரு அதிகாரியின் உதவியுடன், பொலிஸ் பரிசோதகர் சந்தேக நபரைக் கைதுசெய்தார்.

சந்தேக நபர் அநுராதபுரம் சங்கமித்த மாவத்தையைச் சேர்ந்தவரென விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# இன, மத பேதமில்லாமல் சேவையாற்ற அரசாங்கத்துக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது

## நளீம் எம்.பி. தெரிவிப்பு



(மட்டக்களப்பு செய்தியாளர்)

இன, மத பேதமில்லாமல் சேவையாற்றக்கூடிய சந்தர்ப்பம் புதிய அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை அஸ்வெசும திட்டத்தில் அதிகம் உள்வாங்க வேண்டும். புதிய அரசாங்கம் கொண்டுவருகின்ற அனைத்து திட்டங்களும் வெற்றிபெற அரச அதிகாரிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.நளீம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பழைய மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமை(11) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

''கடந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அஸ்வெசும கொடுப்பனவுத் திட்டத்தில் சில குறைபாடுகள் நிறைந்தே காணப்பட்டன. சரியான தரவுகள் மூலம் பயனாளிகள் தெரிவு செய்யப்படாததால் அரச ஊழியர்கள் இன்றும் பொது மக்களினால் குறை கூறப்பட்டே வருகின்றனர். இந்நிலையில், எதிர்வரும் காலங்களில் இத்திட்டமானது ஒழுங்குபடுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் வந்தால் மட்டுமே இது நிலைபேறான திட்டமாக அமையும்.

இத்திட்டத்தினூடாகக் கொண்டுவரப்படும் உற்பத்திப் பொருட்களுக்குரிய முறையான சந்தைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். இத்துறை சார்ந்த நிபுணர்களின் அறிவுரையைப் பெற்று இதனை முன்னெடுக்க வேண்டும். வடக்கு, கிழக்கிலே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை இத்திட்டத்தில் அதிகம் உள்வாங்க வேண்டுமென்பதோடு கடந்த காலங்களைப் போலல்லாமல் தற்போது இன, மத பேதமில்லாமல் சேவையாற்றக்கூடிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தினால் கொண்டுவரப்படுகின்ற அனைத்து வேலைத்திட்டங்களும் வெற்றிபெற அரச அதிகாரிகள் பொறுப்புடன் செயற்படவேண்டும்''- என்றார்.

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களின் நிதியை வீணடிக்காது

## பிரபு எம்.பி. தெரிவிப்பு

(மட்டக்களப்பு செய்தியாளர்)



தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது மக்கள் நிதியை வீணடிக்காது. தேர்தல் வெற்றியை நோக்காகக் கொண்டு பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் முன்னாள் ஜனாதிபதி ரணில் 122 கோடி ரூபா நிதியை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நஷ்ட ஈடாக வழங்கியுள்ளார். எமது அரசாங்கத்தினால் இதற்கான விசாரணைகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன என தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

மட்டக்களப்பில் செவ்வாய்க்கிழமை(11) நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

''அரகலய போராட்டத்தின்போது முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் இல்லங்கள் சேதமாக்கப்பட்டதாகக் கூறி அவர்களுக்கு நஷ்டஈடாக 122 கோடி ரூபா கடந்த கால அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்தது. கடந்த கால பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இவ்வாறான தேர்தல் வெற்றியை நோக்காகக் கொண்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் இவ்வாறு நஷ்ட ஈடுவழங்கியிருந்தார்.

இதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு மக்கள் கஷ்டப்படுகின்ற காலங்களில் இவ்வாறான பாரிய தொகைகளை வழங்கி மக்களின் வரிப்பணத்தை இவர்கள் வீணடித்திருக்கின்றார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளை எமது அரசாங்கம் ஒருபோதும் முன்னெடுக்காது. எமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் இதற்கான விசாரணைகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன. இவ்வாறான வீண் விரயங்கள் தவிர்க்கப்பட வேண்டும். இவர்களை மக்கள் இனங்கண்டு தேர்தலில் நிராகரிக்க வேண்டும்''- என்றார்.

# அம்பாறையில் உள்ளூராட்சித் தேர்தல் மு.கா.வேட்பாளர் குறித்து ஆராய்வு



(சாய்ந்தமருது செய்தியாளர்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள விஷேட குழுவின் முதலாவது கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை (11) நடைபெற்றது.

இதன்போது அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்துக்கும் கட்சி சார்பில் நிறுத்தப்பட வேண்டிய வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதற்கான அடிப்படை விடயங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், தேர்தலுக்கான முன்னோடி செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் குறித்தும் கட்சி ஆதரவாளர்களைத் தயார்படுத்துவது தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமினால் நியமிக்கப்பட்டுள்ள இக்குழுவின் உறுப்பினர்களாக கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். உதுமாலெப்பை, பிரதித் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம். மன்சூர், பிரதிச் செயலாளர் மன்சூர் ஏ. காதர், கட்சியின் பொருளாளரும் கல்முனை மாநகர சபை முன்னாள் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூர், அம்பாறை மாவட்ட செயலாளர் ஏ.சி.சமால்தீன், உயர்பீட உறுப்பினர் எம்.டி. சப்ராஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போரதீவுப்பற்று பிரதேசத்தில் காட்டு யானைகள் அட்டகாசம்: விவசாயிகள் கவலை

போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வெல்லாவெளி, ஆனைகட்டியவெளி வயல் கண்டங்களுக்குள் நேற்று ( 12) அதிகாலை நேரத்தில் புகுந்த காட்டுயானைகள் பல ஏக்கர் வயல்நிலங்களை சேதப்படுத்தியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.


அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளத்தில் அழிந்துபோய் மீதமாகவுள்ள நெற் செய்கையை அறுவடை செய்வதற்கு முன்னமே காட்டு யானைகள் துவம்சம் செய்து வருவதாக அப்பகுதி விவசாயிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அதற்காக வேண்டி இரவு முழுவதும் நடு நிசியிலிருந்து காட்டு யானைகளிடமிருந்து தமது நெற்பயிரைப் பாதுகாக்க வேண்டிய அவலநிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்டம் மண்டூர் பகுதி விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர்.

தமது வயற் பகுதியை அண்மித்துள்ள சிறிய பற்றைக் காடுகளிலும் வாய்க்கால் ஓரங்களிலும் இவ்வாறு காட்டுயானைகள் தங்கி நின்று இரவு வேளைகளில் வயல் நிலங்களுக்குள் உட்புகுந்து விளைந்த வயல்நிலங்களை துவம்சம் செய்து வருவதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப் பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக காட்டுயானைகளின் தொல்லைகளும் அட்டகாசங்களும் அதிகரித்துள்ளன. யானைகள் கிராமங்களுக்குள் உட்புகாமலிருப்பதற்காக யானைப் பாதுகாப்பு வேலிகளை அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்தும் அது இதுவரையில் நிறைவேறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# விநாயகர்புரத்தில் நெல் சுத்திகரிப்பு நிலையம்





(வி.சுகிர்தகுமார்)

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேச சபையினால் LDSP-PT2 எனும் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக உலக வங்கியின் நிதி அனுசணையுடன் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா மற்றும் நெல் சுத்திகரிப்பு நிலையம் என்பன திறந்து வைக்கப்பட்டன .

திருக்கோவில் பிரதேசத்துக் குட்பட்ட தம்பிலுவில் பகுதியில் சிறுவர்களின் பொழுது போக்கு அம்சங்களுடனான சிறுவர் பூங்கா மற்றும் விநாயகபுரம் பகுதியில் விவசாயிகளின் நலன் கருதி அமைக்கப்பட்ட நெல் சுத்திகரிப்பு நிலையம் என்பன நேற்று முன்தினம் (11) திறந்து வைக்கப்பட்டன

திருக்கோவில் பிரதேச சபை செயலாளர் ஜெயந்தி வீரபத்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிழக்கு மகாண உள்ளூராட்சி ஆணையாளர் எல்.எம்.அஸ்மி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

# அன்னையர் குழுவுக்கு வாழ்வாதார உதவிகள்






(வாழைச்சேனை செய்தியாளர்)

கிரான் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட அன்னையர் குழுவுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

கிரான் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக வைத்திய அதிகாரியும் சந்திவெளி பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியுமான வைத்தியர் எஸ்.சிவலக்சனின் முயற்சியின் பயனாக கிரான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பாலையடித்தோனா மற்றும் கிரான் மேற்கு குடும்பநல உத்தியோகத்தர் பிரிவிலுள்ள அன்னையர் குழுவுக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரம் வழங்கப்பட்டதுடன் கிரான் கிழக்கு குடும்ப நல உத்தியோகத்தர் பிரிவிலுள்ள அன்னையர் குழுவுக்கு சவர்க்கார உற்பத்திக்கான மூலப்பொருட்கள், தயாரிக்கும் உபகரணங்கள் வாங்குவதற்காக அறுபத்தையாயிரம் ரூபா நிதியுதவி மற்றும் முறக்கொட்டான்சேனை குடும்ப நல உத்தியோகத்தர் பிரிவிலுள்ள அன்னையர் குழுவுக்கு கோழிக்குஞ்சு பொரிக்கும் இயந்திரம் என்பனவும் வழங்கப்பட்டன.

இவ் அன்னையர் குழுவுக்கான உதவியை மனிதநேய அறக்கட்டளை சுப்ரமுனிய கோட்டம் யாழ்ப்பாணக் கிளைத் தலைவர் வழங்கினார்.

# தென்னைமரத்திலிருந்து தவறி விழுந்து இளைஞன் உயிரிழப்பு

(பாறுக் ஷிஹான்)

தேங்காய் பறிக்க தென்னை மரத்தில் ஏறிய இளைஞன் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பிரதேசத்தில் நேற்று (12) இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் நிந்தவூர்-08, அல்மினன் வீதியைச் சேர்ந்த 25 வயதுடைய முஹமட் அன்சார் முஹமட் ஆசாத் என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

மரணமடைந்த இளைஞன் கடற்றொழிலை மேற்கொள்வதுடன் 11 பேர் கொண்ட குடும்பத்தில் முதலாவது பிள்ளையாவார்.

நேற்று விடுமுறை தினமாகையால் தேங்காய் பறிப்பதற்குச் சென்ற நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. அத்துடன், உயரமான தென்னை மரத்தில் ஏறி தேங்காய்களைப் பறிக்கும்போது தென்னை மரத்தின் காய்ந்த ஓலையொன்றைப் பிடித்தபோது கால் வழுக்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நிந்தவூர் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சடலம் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் - ஜவாஹீர் மேற்கொண்டார்.

# சமாதான நீதவான்

அட்டாளைச்சேனை 07ஆம் பிரிவு ரஹ்மானியா பாத் கிராமத்தைச் சேர்ந்த உதுமாலெப்பை முஹம்மது ஸபீர் தீவு முழுவதுக்குமான சமாதான நீதவானாக கடந்த ஜனவரி (30) வியாழக்கிழமை கல்முனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.எம்.ரியால் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.



எம்.எஸ். உதுமாலெப்பை, ஏ.எம்.சித்தி சனூனா தம்பதியின் புதல்வரான இவர் இலங்கை மின்சார சபையில் கடமையாற்றுகிறார்.

# குமாரபுரம் படுகொலையின் 29வது ஆண்டு நினைவு

(சீனக்குடா செய்தியாளர் கியாஸ்)

மூதூர் - குமாரபுரம் பகுதியில் இடம்பெற்ற மனிதப் படுகொலையின் 29ஆவது ஆண்டு நினைவுதினம் செவ்வாய்க்கிழமை (11) மாலை கிளிவெட்டி - குமாரபுரத்தில் நினைவுகூரப்பட்டது.

இதன்போது பிரதான சுடர் ஏற்றப்பட்டது. அத்தோடு, குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உருவப்படங்களுக்கு மலர்தூவி விளக்கேற்றி மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.இந்நிகழ்வை குமாரபுரம் பிரதேச மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இறுதியாக நிகழ்வில் கலந்துகொண்ட சமூக செயற்பாட்டாளர்களிடம் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

குமாரபுரம் படுகொலைச் சம்பவத்தில் 26 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் பலர் காயமடைந்திருந்தனர்.

குறித்த படுகொலைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தமது உறவுகளுக்கு 29 ஆண்டுகளுக்குப் பின்னரும் நீதி கிடைக்காமல் நீதி கோரி வரும் நிலையில் குறித்த படுகொலையின் 29ஆவது நினைவேந்தல் நிகழ்வை பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து முன்னெடுத்திருந்தனர். குறித்த பாதிப்பிலிருந்து மீளாத மக்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டநிலையில் வாழ்ந்து வருகின்றார்கள்.





மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குமாரபுரம் கிராமத்தில் அத்துமீறி நுழைந்த ஆயுததாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு மற்றும் வாள்வெட்டுச் சம்பவத்தின் காரணமாக பெண்கள், சிறுவர்கள் உட்பட 26 அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்ததுடன் 15வயதான சிறுமி ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார். இக் கொடூரச் சம்பவம் 1996.02.11 ஆம் திகதி மாலை இடம்பெற்றிருந்தது.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக 1996ஆம் ஆண்டு மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் தெஹிவத்தை இராணுவ முகாமில் சேவையிலிருந்த 8 இராணுவ வீரர்கள் சாட்சியாளர்களினால் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கெதிராக குற்றவியல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் குறித்த வழக்கு திருகோணமலை மேல்நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டு நடைபெற்று வந்தது.

இந்நிலையில், அன்றைய யுத்த சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு எதிரிகளின் வேண்டுகோளுக்கமைய சட்ட மா அதிபரின் ஆலோசனையின் பேரில் பாதுகாப்புக் கருதி குறித்த வழக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணை ஜூரிகள் சபை முன்னிலையில் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த நிலையில் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் 2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27ஆம் திகதி எஞ்சியிருந்த 6 முன்னாள் இராணுவ வீரர்களும் (பிணையில் இருந்தபோது இருவர் இறந்துவிட்டனர்) அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டதுடன் அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டனர்.

# டுபாய் சென்றுள்ள ஜனாதிபதி அநுர அரச தலைவர்களைச் சந்தித்தார்

2025ஆம் ஆண்டு நடைபெறும் உலக அரச உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று முன்தினம் (11) பல அரச தலைவர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொண்டார். இதன்போது, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப்புக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (11) இடம்பெற்றது.

இலங்கை அரசியலில் அரசாங்கத்தின் சிறப்பான வெற்றிக்காக பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்தை வலுப்படுத்துவது மற்றும் சந்தையை பல்வகைப்படுத்துவது குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் கவனஞ்செலுத்தியதுடன், புதிய மூலோபாயத் திட்டத்தின் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடினர்.

தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதார வேலைத்திட்டம் தொடர்பில் பாகிஸ்தான் பிரதமரிடம் விளக்கமளித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, தற்போதைய அரசாங்கம் ஊழலற்ற, வெளிப்படையான பொருளாதார முகாமைத்துவத்தை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்தார். அதன்மூலம் இலங்கையின் பொருளாதாரத்துக்கு நல்லதொரு அடித்தளத்தை அமைக்கும் வகையில் செயற்பட முடியுமென்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையிலான சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அதனையடுத்து, பிரித்தானிய முன்னாள் பிரதமர் டோனி பிளேயர் மற்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றதுடன், பிரித்தானியாவின் நிபுணத்துவம் மற்றும் பல்வேறு துறைகளில் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளவதற்கு இலங்கைக்கு காணப்படும் இயலுமையையும் டோனி பிளேயார் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இலங்கையில் சுகாதாரம், துறைமுகம் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்து முன்னாள் பிரித்தானிய பிரதமரிடம் தெரிவித்த ஜனாதிபதி, அதற்காக முதலீட்டாளர்களை ஈடுபடுத்துமாறும் அழைப்பு விடுத்தார்.

காலநிலை இடர்பாடுகளை எதிர்கொள்ளுதல், நல்லாட்சி, விவசாயம் போன்ற துறைகளில் நிபுணத்துவம் மற்றும் பயிற்சிகளை இலங்கை பெற்றுக்கொள்ள முடியுமெனச் சுட்டிக்காட்டிய டோனி பிளேயர், இலங்கையின் தற்போதைய ஆட்சிக்கு பாராட்டுத் தெரிவித்தார்.

குறிப்பாக, தற்போதைய அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழலற்ற நிர்வாகத்துக்கும் டோனி பிளேயர் இதன்போது பாராட்டு தெரிவித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தும் ஜனாதிபதியுடன் இந்த விஜயத்தில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி

*ராமு தனராஜா*



பதுளை - பண்டாரவளை வீதி ஹால்பே எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கருகில் நேற்று (12) பிற்பகல் மோட்டார் சைக்கிளொன்றும் லொறியொன்றும் மோதியதில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக எல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

வெல்லவாய, கல்போக்க, பெரகெட்டியவைச் சேர்ந்த 43 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளையிலிருந்து பண்டாரவளை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. லொறி மோதியதில் மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி அருகிலுள்ள தொலைபேசிக் கம்பத்தில் மோதியதால் கம்பம் சாய்ந்து விழுந்ததாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

லொறியின் சாரதியான டி.எம்.இமாஷா மாதவ (வயது 30), ஹங்குரங்கெத்த, மாலியத்த, கோனகன்தென பகுதியைச் சேர்ந்தவர் நபர் எல்ல பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தெமோதர மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் எல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அமரபுர பீடத்தின் மகாநாயக்க அக்தபத்திர மஹோற்சவம் தொடர்பான கலந்துரையாடல்



அமரபுர பீடத்தின் அதிஉயர் மகாநாயக்க பதவிக்கான அக்தபத்திரம் வழங்கும் மஹோற்சவத்தை அரச அனுசரணையுடன் நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (11) ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இலங்கை அமரபுர மகா பீடத்தின் அதிஉயர் மகாநாயக்க பதவி தொடர்பான அக்தபத்திர மஹோற்சவத்தை மார்ச் 10ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அக்தபத்திர மஹோற்சவத்துக்கு அரசாங்கத்தால் வழங்கக்கூடிய அனைத்து ஆதரவையும் வழங்குவதாக ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க இதன்போது தெரிவித்தார்.

இந்த அக்தபத்திர மஹோற்சவத்துக்கு பங்களிக்கும் அரசு நிறுவனங்களுக்கு மஹோற்சவம் தொடர்பான பணிகளைப் பகிர்ந்தளிப்பது குறித்தும் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை அமரபுர மகாசங்கச் சபையின் பதிவாளர் வணக்கத்துக்குரிய பலபிட்டியே சிறிசீவலி தேரர் உட்பட மகா சங்கத்தினர், புத்தசாசனம், மத விவகாரங்கள் மற்றும் கலாசார அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.எம்.பி. அத்தபத்து உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் அமரபுர பீட நலன்புரிச் சபையின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

# புள்ளிவிபரவியல் முறைமையை வலுப்படுத்தும் One Registry



நாட்டின் குடிசார் பதிவு மற்றும் முக்கிய புள்ளிவிபரவியல் முறைமையை வலுப்படுத்தும் நோக்குடன் முன்னெடுக்கப்படுகின்ற ஒரு முக்கியமான படியாக நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளை விரைவுபடுத்துவதற்கான உள்ளூர் நிர்வாக புள்ளிவிவர சேகரிப்புக் கட்டமைப்புகள் என்ற கூட்டு முயற்சியை இலங்கை அரசாங்கமும் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும் ஒன்றிணைந்து ஆரம்பித்துள்ளன.

'One Registry' (ஒற்றைப் பதிவகம்) என்று பெயரிடப்பட்டுள்ள இம்முயற்சி, இலங்கையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (United Nations Development Programme - UNDP) மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் (World Health Organization (WHO) ஆகியவற்றால் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இலங்கை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், நிலைபேண் அபிவிருத்தி இலக்குகள் (SDG) நிதியத்தின் நிதியுதவியில் முன்னெடுக்கப்படுகின்றது.

குறிப்பாக, நலிவுற்ற சமூகங்கள் அடங்கலாக, அனைத்து பிரஜைகளும் தரமான அரச சேவையை அணுகுவதற்கு சமமான வாய்ப்பைக் கொண்டிருப்பதை உறுதி செய்து, அரவணைப்பு உள்ளடக்கம் கொண்ட டிஜிட்டல் பரிமாண மாற்றம் மற்றும் நிலைபேண் அபிவிருத்தி ஆகியவற்றுக்கு வழிவகுக்கும் நோக்குடன் அரசாங்கத்தின் பரந்தளவிலான டிஜிட்டல் பரிமாண மாற்ற நிகழ்ச்சி நிரல் மற்றும் மூலோபாயத்துடன் ஒன்றியுள்ளது.

பிரதமர் (கலாநிதி) ஹரிணி அமரசூரிய இந்நிகழ்ச்சித் திட்டம் மாற்றக்கூடிய சாத்தியங்கள் குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

"குடிசார் பதிவு மற்றும் முக்கிய புள்ளிவிபரவியல் முறைமையை (CRVS) வலுப்படுத்துவது பொது நிர்வாகத்தை மேம்படுத்தி, எமது டிஜிட்டல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்வதை நோக்கிய பரிமாண மாற்றத்துக்கான ஒரு முக்கிய படியாகும். வெளிப்படைத்தன்மை, அரவணைப்பு உள்ளடக்கம் மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றை அங்கீகரித்து, முக்கியமான சேவைகளை இலங்கை மக்கள் அனைவரும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு வசதியை இம்முயற்சி உறுதிசெய்யும்" - என்று குறிப்பிட்டார்.

இம்முயற்சி பிரதானமாக மூன்று முக்கிய தூண்கள் மீது கவனஞ்செலுத்துகின்றது. டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட சிவில் பதிவு நடைமுறைகள், முக்கிய அரச நிறுவனங்களுடன் இணைக்கப்பட்ட செயற்பாட்டு இயக்கம் கொண்ட ஒரு பதிவகம் மற்றும் இக்கட்டமைப்பின் நன்மைகளை உச்சப்படுத்துவதற்காக பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் டிஜிட்டல் அறிவு ஆகியவை அந்தத் தூண்கள் ஆகும். இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை (e-NIC) மற்றும் இலங்கையின் தனித்துவ டிஜிட்டல் அடையாளம் (Sri Lanka Unique Digital Identity - SLUDI) போன்ற செயற்றிட்டங்கள் அடங்கிய டிஜிட்டல் சார்ந்த தேசிய முயற்சிகளுக்கு இது பெரிதும் துணைபோவதுடன், ஒருங்கிணைந்த மற்றும் டிஜிட்டல் ரீதியாக அரவணைப்பு உள்ளடக்கம் கொண்ட சமுதாயத்தை நோக்கிய நாட்டின் குறிக்கோளை முன்னெடுத்துச் செல்வதை மேம்படுத்தும்.

# நவம் பௌர்ணமி போயா தினத்தை முன்னிட்டு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தின் தர்ம சொற்பொழிவு









**ஒவ்வொரு போயா தினத்திலும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தின் ஏற்பாட்டிலும் பங்களிப்புடனும் நடைபெறும் தர்ம சொற்பொழிவு நேற்று கோட்டே நாகவிகாரையிலிருந்து நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. கோட்டே ஸ்ரீ நாக விகாரையின் விஹாராதிபதி சாஸ்த்ரபதி சங்கைக்குரிய கொட்டஹேன நாரத தேரர் இந்தப் பிரசங்கத்தை நிகழ்த்தினார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று (12) கோட்டே நாக விகாரையில் நடைபெற்ற இந்தப் பிரசங்கத்தில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றிருந்தனர்.**

# இலங்கையில் முதல் தடவையாக ஆரம்பமான Conference Ambassador Programme



இலங்கை மாநாட்டு தூதர் நிகழ்ச்சித் திட்டத்தை (Sri Lanka Conference Ambassador Programme - SLCAP) ஆரம்பித்து சர்வதேச மாநாடுகளை நடத்துவதற்கு விரும்பி நாடப்படுகின்ற ஒரு முன்னணி நாடாக மாறும் தனது பயணத்தில் முக்கியமான சாதனை மைல்கல் ஒன்றை இன்று இலங்கை நிலைநாட்டியுள்ளது. இந்த வகையில் முதல் தடவையாக முன்னெடுக்கப்படுகின்ற இந்த முயற்சியானது சினமன் ஹோட்டல்கள் மற்றும் உல்லாச விடுதிகள் (Cinnamon Hotels & Resorts), இலங்கை மாநாட்டுப் பணியகம் (SLCB) மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகியவற்றால் முன்னெடுக்கப்படுவதுடன், வணிக நிகழ்வுகளுக்கான சர்வதேச மையமாக இலங்கையை உருவாக்குவதற்கு நம்பிக்கைக்குரிய நிறுவனங்களை ஒன்றுதிரட்டுகின்றன.

இன்று ஆரம்பிக்கப்படுகின்ற இந்த நிகழ்வில் வெளிநாட்டு விவகாரங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் பிரதம அதிதியாகவும் சர்வதேச கூட்டங்கள் மற்றும் மாநாடுகள் சங்கத்தின் (International Congress and Convention Association - ICCA) பிரதம நிறைவேற்று அதிகாரி செந்தில் கோபிநாத் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இலங்கை மாநாட்டுத் தூதர் நிகழ்ச்சித்திட்டமானது உலக அரங்கில் இலங்கையை ஊக்குவிப்பதற்கு உள்நாட்டு அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் தொழில்சார்ந்தவர்கள் தூதர்களாக செயற்படும் வகையில் அவர்களுக்கு வலுவூட்டி, ஈடுபாடுகளை வளர்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 25 தூதர்கள் உள்வாங்கப் பட்டுள்ள நிலையில், இலங்கைக்கு சர்வதேச மாநாடுகளை ஈர்க்கும் வகையில் தத்தமது துறைகளில் செல்வாக்கு மிக்க தலைவர்களை இனங்கண்டு அவர்களின் உதவியையும் SLCAP நாடவுள்ளது.

நாட்டில் கூட்டங்கள், ஊக்குவிப்புகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் (Meetings, Incentives, Conferences, and Exhibitions - MICE) துறையில் மாற்றத்தை ஏற்படுத்தி - பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்து- நிலைபேற்றியலை ஊக்குவித்து மற்றும் அறிவைப் பரிமாறுவதே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம். விருந்தோம்பல் துறையில் முத்திரை பதித்த நிறுவனம் என்ற ரீதியில் இலங்கையில் சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் துறைகளை நேர்த்தியாக்குவதில் சினமன் ஹோட்டல்கள் மற்றும் உல்லாச விடுதிகள் அளப்பரிய பங்காற்றி வருகின்றன. SLCAP ஊடாக இந்நிகழ்ச்சித்திட்டமானது ஒருமித்த சிந்தனை கொண்ட கூட்டாளர்களுடன் இணைந்து வணிக நிகழ்வுகளுக்கான உலகத்தரம் வாய்ந்த இடமாக இலங்கையை மேம்படுத்துவதற்கு விருந்தோம்பல் உட்கட்டமைப்பு மற்றும் மூலோபாய இலக்கு ஆகியவற்றை ஒருங்கிணைக்கின்றது.

மேலதிக விபரங்களுக்கு www.slcap.lk என்ற தளத்தைப் பார்வையிடவும்.

## புதிய சொகுசு அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டமான 'JAdore Negombo' ஐ

# ஹோட்டல் வீதியில் அறிமுகம் செய்துள்ளது Prime Residencies




Prime Residencies PLC நீர்கொழும்பு கடற்கரைக்கு முன்பாக அமைந்துள்ள JAdore Negombo ஐ ஹோட்டல் வீதியில் அறிமுகம் செய்துள்ளது. அதனூடாக உயர்தரம் மற்றும் சொகுசான தொடர்மனைத் தொகுதியில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியுள்ளது. நீர்கொழும்பில் ஹோட்டல் வீதி என்பது உள்நாட்டவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் மிகவும் புகழ்பெற்ற பகுதியாக அமைந்திருப்பதுடன், இலங்கையின் தங்கமான கடற்கரை (golden coast) என புகழ்பெற்ற பகுதியாக நீர்கொழும்பு கடற்கரைப் பகுதி அமைந்துள்ளது.

இந்த அபிவிருத்தித் தொகுதி 229.2 பேர்ச், கடற்கரைக்கு முகப்பாக அமைந்துள்ளது.

இது T வடிவிலான அலங்கார வடிவமைப்பைக் கொண்டுள்ளதுடன், 21- மாடி வெள்ளை டவர் கிடைத் தோற்றத்தையும் 8-மாடி எமரல்ட் டவர் செங்குத்தான தோற்றத்தையும் வழங்குகின்றன.

இதில் 177 நுட்பமான முறையில் வடிவமைக்கப்பட்ட சேவைப்பட்ட குடியிருப்புகள் நவீன அலங்காரத்துடன் அமைக்கப்பட்டுள்ளன.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து 15 நிமிடங்களில் பயணிக்கக்கூடிய தூரத்தில் அமைந்திருக்கும் JAdore Negombo, இலங்கையின் வளர்ந்து வரும் சுற்றுலா மையத்தினால் இதுவரையில் வழங்கப்படாத ஒப்பற்ற முதலீட்டு வாய்ப்பை அறிமுகம் செய்துள்ளது.

JAdore Negombo இல் நுட்பமான முறையில் வடிவமைக்கப்பட்ட வசிப்பிடப் பகுதிகள் அடங்கியுள்ளன. இதில் ஒரு படுக்கையறை 900 sq. ft. தொடர்மனைகள் மற்றும் இரண்டு படுக்கையறை 975 sq. ft. முதல் 1,120 sq. ft. தொடர்மனைகள் அடங்கியுள்ளன. இதில் பெரிய அலகுகள் dual-key வசதிகளைக் கொண்டுள்ளன.

மூன்று படுக்கையறைகளைக் கொண்ட White Presidential Suites இனால் 2,189 sq. ft. இடவசதி வழங்கப்படுவதுடன், ஒன்பது அலகுகள் காணப்படுகின்றன. இவை நுணுக்கமான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

உயர்தர உள்ளம்சங்களில் சகல வசதிகளையும் கொண்ட சமையலறைகள், smart locks, வாயு குளிரூட்டிகள் மற்றும் பிரத்தியேக டெரஸ் பகுதிகள் போன்றன அடங்கியுள்ளன. White Presidential Suites இல் சொகுசான தோற்றத்தை வழங்க பலகைத்தரை அமைக்கப்பட்டுள்ளது.

உலகத் தரம் வாய்ந்த JAdore அனுபவத்தில் Level 21 Beach Club உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்து சமுத்திரத்தை முகப்பாகக் கொண்ட நீச்சல் தடாகமாக இது அமைந்துள்ளதுடன், சகல வசதிகளையும் கொண்ட fitness studio மற்றும் wellness centre பிரத்தியேகமான concierge மற்றும் butler service, lounges உடனான beach service, டவல்கள் மற்றும் குடைகள் மற்றும் 24 மணி நேர பரந்த பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு வசதிகள் அடங்கியுள்ளன.

முதலீட்டாளர்களுக்கு பிரத்தியேகமான செலுத்தும் திட்டங்களை Prime Residencies வழங்குகிறது. நெகிழ்ச்சியான கொடுப்பனவு திட்டத்தில் 1% மாதாந்த தவணைகள் அடங்கியுள்ளதுடன், சொத்து முகாமைத்துவத்தை நிர்வகித்துக் கொள்ளக்கூடியதாக அமைத்துள்ளது. மேலும், ஒப்பற்ற மூலதன வருமதிகளை வழங்கி, முதலீட்டாளர்களுக்கு நீண்ட காலப் பெறுமதியை பெற்றுக் கொடுக்கும்.

இந்தப் பகுதியில் காணப்படும் ஒரே முன்னணி சேவை வசதிகளைக் கொண்ட தொடர்மனைத் தொகுதி எனும் வகையில் JAdore Negombo இனால் அருகாமையிலுள்ள சொகுசு ஹோட்டல்களுடன் ஒப்பிடுகையில் அதிகளவு போட்டிகரத்தன்மை வாய்ந்த கட்டணங்கள் வழங்கப்படுகின்றன. மேலும், முதலீட்டாளர்களுக்கு ஆண்டு 8-11% வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் 80% முதலீட்டு வருமானம் (ROI) வழங்கப் படுமென எதிர்பார்க்கப்படுகிறது.



# ஊழல் நிறைந்த நாடுகளின் பட்டியல்: முதலிடத்தில் தென்சூடான்; 121ஆவது இடத்தில் இலங்கை!

## ஊழல் குறைந்த நாடாக தொடர்ந்தும் 6ஆவது ஆண்டாக டென்மார்க் முதலிடம்

உலகில் 2024ஆம் ஆண்டுக்கான மிகவும் ஊழல் நிறைந்த நாடுகளின் கண்ணோட்ட குறியீடு தரவரிசைப் பட்டியலில் ஊழல் மிகுந்த முதல் 10 நாடுகளின் பட்டியலில் 8 புள்ளிகளுடன் தெற்கு சூடான் முதலாவது இடத்திலுள்ளது. இப்பட்டியலில் இலங்கை 121ஆவது இடத்திலுள்ளது.

இதேவேளை, மொத்தம் 180 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில் ஊழல் குறைந்த நாடாக தொடர்ந்து 6ஆவது ஆண்டாக டென்மார்க் முதலிடம் பிடித்துள்ளது.

இந்தத் தரவரிசைப் பட்டியலில் ஊழல் குறைந்த முதல் 10 நாடுகளில் டென்மார்க் 90 மதிப்பெண்களுடன் முதலிடத்தை தக்க வைத்துக்கொண்டுள்ள நிலையில், பின்லாந்து 88 மதிப்பெண்களுடன் இரண்டாம் இடத்திலும் சிங்கப்பூர் 88 மதிப்பெண்களுடன் மூன்றாம் இடத்திலும் உள்ளன.

சர்வதேச வெளிப்படைத்தன்மை என்ற தன்னார்வ அமைப்பு இந்தக் குறியீட்டை ஒவ்வொரு ஆண்டும் வெளியிட்டு வருகிறது. அரச அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்களில் நடைபெறும் ஊழல் உட்பட 13 தரவுகளின்படி பூஜ்ஜியம் முதல் 100 மதிப்பெண்கள் அடிப்படையில் இந்தத் தரவரிசைப் பட்டியலை வெளியிடுகிறது. இதில், ஊழல் மிகுந்த நாடு என்றால் பூஜ்ஜியம் மதிப்பெண்ணும் ஊழலற்ற நாடு என்றால் 100 மதிப்பெண் என்ற அடிப்படையில் நாடுகள் தரவரிசைப்படுத்தப்படுகின்றன.

அந்தவகையில் ஊழல் மிகுந்த முதல் 10 நாடுகள் பட்டியலில் 8 புள்ளிகளுடன் தெற்கு சூடான் முதலாவது இடத்திலும் 09 புள்ளிகளுடன் சோமாலியா இரண்டாவது இடத்திலும் 10 புள்ளிகளுடன் வெனிசூலா மூன்றாவது இடத்திலும் உள்ளன. இதற்கு அடுத்தடுத்த இடங்களில் சிரியா (12 புள்ளிகள்), யேமன் (13 புள்ளிகள்), லிபியா (13 புள்ளிகள்), ஈகுவடோரியல் கினியா(13 புள்ளிகள்), நிகரகுவா (14 புள்ளிகள்), சூடான் (15 புள்ளிகள்) உள்ளன.

தெற்காசியாவைப் பொறுத்தவரை பாகிஸ்தான் 135ஆவது இடத்திலும் இலங்கை 121ஆவது இடத்திலும் உள்ளன. அதேநேரத்தில் பங்களாதேஷ் 149ஆவது இடத்துக்குப் பின்தங்கியுள்ளது.

கடன் சுமை, அரசியல் நிச்சயமற்ற சூழலை எதிர்கொண்டுவரும் மேற்குறித்த இந்த நாடுகள், ஊழலிலும் மிகுந்து காணப்படுகின்றன. இருந்தபோதும், இந்த நாடுகளில் நீதித் துறை வலுவாக இருப்பது, வலுவான ஊழல் கண்காணிப்பை அரசு உறுதிப்படுத்த உதவுகிறதென்று தனது அறிக்கையில் சர்வதேச வெளிப்படைத்தன்மை அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

தீவிர ஊழல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் சீனா 76ஆவது இடத்திலுள்ளது. அமெரிக்கா 65 மதிப்பெண்களுடன் 28ஆவது இடத்திலும் பிரித்தானியா 71 மதிப்பெண்களுடன் 20ஆவது இடத்திலும் இந்தியா 96ஆவது இடத்திலும் உள்ளன.

மேலும், 2012 முதல் 32 நாடுகள் ஊழலைக் குறைப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ள நிலையில், 148 நாடுகளில் மோசமான ஊழல்கள் காணப்படுகின்றன.

இக்குறியீட்டில் உலக நாடுகளின் சராசரி மதிப்பெண் 43ஆக உள்ள நிலையில், ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் அமைந்துள்ள 71 சதவீதத்துக்கும் மேற்பட்ட நாடுகளின் சராசரி மதிப்பெண் 50இற்கும் குறைவாகவே உள்ளது. இது உலகின் ஒவ்வொரு பகுதியிலும் ஊழல் ஓர் ஆபத்தான பிரச்சினை என்பதைக் காட்டுகிறது.ஆனால், பல நாடுகளில் தெரிவுசெய்யப்பட்ட அரசுகள் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளால் போதியளவில் சிறந்த மாற்றம் நிகழ்ந்து வருவதைக் காட்டுவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊழல் என்பது வெறும் பொருளாதார அல்லது நிர்வாகப் பிரச்சினை அல்ல - இது ஜனநாயகம், ஸ்திரத்தன்மை மற்றும் மனித உரிமைகளுக்கு ஓர் அடிப்படை அச்சுறுத்தல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், வலுவான சட்ட கட்டமைப்புகள் மற்றும் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான தீவிர ஊழல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் ஊழலைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசரத் தேவையை இது வலியுறுத்தியுள்ளது.

## புலம்பெயர்ந்தோர் நாடு கடத்தல்: ட்ரம்ப் நடவடிக்கைக்கு பாப்பரசர் கடும் கண்டனம்



அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் அங்கு சட்டவிரோதமாக குடியேறியவர்களை நாடு கடத்தி வருகிறார். இந்நடவடிக்கைக்கு பாப்பரசர் பிரான்சிஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் அமெரிக்க ஆயர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

''ட்ரம்ப் நிர்வாகத்தில் சட்டவிரோதமாக அமெரிக்காவுக்கு புலம்பெயர்ந்தோரை பெருமளவில் நாடு கடத்துவது கண்டனத்துக்குரியது.

புலம்பெயர்ந்த மக்களை வலுக்கட்டாயமாக நாடு கடத்தும் திட்டம் அவர்களின் உள்ளார்ந்த கண்ணியத்தை இழக்கச் செய்து மிகவும் மோசமான முடிவுக்குத் தள்ளிவிடும். புலம்பெயர்ந்தோரை கவனித்துக்கொள்வதுதான் நமது முன்னுரிமை. அவர்களை நாடுகள் வரவேற்க வேண்டும், பாதுகாக்க வேண்டும்'' - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் காஸாவை கொண்டுவர ட்ரம்ப் விருப்பம்



காஸாவை விட்டு வெளியேறும் பலஸ்தீனர்களுக்கு அடைக்கலம் கொடுக்காவிட்டால் ஜோர்தான் நாட்டுக்கான நிதியுதவியை நிறுத்தப்போவதாக ட்ரம்ப் தெரிவித்திருந்த நிலையில், ஜோர்தான் மன்னர் அப்துல்லாஹ், ட்ரம்ப்பை வெள்ளைமாளிகையில் சந்தித்து உரையாடினார்.

காஸாவை அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து, மிகச்சிறந்த சுற்றுலா வாசஸ்தலமாக மாற்ற விரும்புவதாக ட்ரம்ப் மீண்டும் தெரிவித்தார்.

பலஸ்தீனர்களை வெளியேற்றாமல் காஸாவை மறுகட்டமைப்பு செய்யவேண்டும் என்பதில் வளைகுடா நாடுகள் ஒருமித்த நிலைப்பாட்டுடன் இருப்பதாக ட்ரம்ப்பிடம் தான் கூறியதாக ஜோர்தான் மன்னர் தெரிவித்தார்.

### பலஸ்தீன குடியிருப்புகள் மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்

இந்நிலையில், பலஸ்தீன எல்லைக்குட்பட்ட துல்காரெம் குடியிருப்பு மற்றும் அகதிகள் முகாம்கள் மீது இஸ்ரேல் இராணுவம் அடுத்தடுத்து தாக்குதல் நடத்தியுள்ளது.

இஸ்ரேல் இராணுவம் முற்றுகையிட்டுள்ளதால் தொடர்ந்து 17ஆவது நாளாக துல்காரெம் பகுதிக்கு உணவு, மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குடியிருப்புப் பகுதிகளுக்குட்பட்ட 3 கட்டடங்களை இஸ்ரேல் இராணுவம் ஆக்கிரமித்துள்ளதாகவும், அங்கிருந்து பலஸ்தீன மக்கள் வசிக்கும் குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

துல்காரெம் மற்றும் நுர் ஷாம்ஸ் பகுதிகளிலுள்ள முகாம்களை இஸ்ரேல் இராணுவம் தீயிட்டு எரித்துள்ளது. இதனால் அங்கிருந்த மக்கள் வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அப்பகுதியில் மூன்று வீடுகளையும் முற்றிலும் அழித்துள்ளது.

மேலும், துல்காரெம் பகுதியிலுள்ள பள்ளிவாசலருகே இருந்த வீடொன்றிலிருந்து இரு பெண்களை இஸ்ரேல் இராணுவம் சிறைபிடித்துச் சென்றுள்ளதாக வாஃபா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே 6 வார போர் நிறுத்தம் ஏற்பட்டு, ஹமாஸ் வசமுள்ள 33 இஸ்ரேல் பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றனர். அதற்கு ஈடாக இஸ்ரேல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான பலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்படுகின்றனர்.

இதுவரை 5 தடவைகள் விடுவிப்புகள் மூலம் 21 இஸ்ரேல் பணயக் கைதிகளும் 730 பலஸ்தீன சிறைக் கைதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், பலஸ்தீன எல்லையின் மேற்குக்கரைக்குட்பட்ட பகுதிகளில் தொடர்ந்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாளை மறுதினத்துக்குள்... பணயக் கைதிகளை விடுவிக்காவிட்டால் போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்கு வரும்

### இஸ்ரேல் பிரதமர் எச்சரிக்கை



''ஹமாஸ் அமைப்பு சனிக்கிழமைக்குள் பணயக் கைதிகளை விடுவிக்காவிட்டால் காஸா போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்கு வரும்'' - என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி தொடங்கிய நிலையில் இப்போர் கடந்த 15 மாதங்களாக நீடித்து வந்தது. காஸாமீதான இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை 48,189இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 1,11,640இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து கடந்த மாதம் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இதுதொடர்பாக இஸ்ரேல்-ஹமாஸ் இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் அண்மையில் கையெழுத்தானது.

ஹமாஸ் அமைப்பினர் பிடித்துச்சென்ற பணயக் கைதிகளை விடுவிக்கவும் அதற்காக இஸ்ரேல் சிறையிலுள்ள பலஸ்தீனர்களை விடுவிக்கவும் முடிவு செய்யப்பட்டது. இதன்படி, பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றனர். இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவதாக ஹமாஸ் அமைப்பு குற்றஞ்சாட்டி, பணயக் கைதிகள் விடுவிப்பதை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு ''ஹமாஸ் அமைப்பு சனிக்கிழமைக்குள் பணயக் கைதிகளை விடுவிக்காவிட்டால் காஸா போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்கு வரும்'' என எச்சரிக்கை விடுத்துள்ளதுடன், ''ஹமாஸ் அமைப்பு இறுதியாக தோற்கடிக்கப்படும் வரை இராணுவம் தீவிர போரில் ஈடுபடும்'' என அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நாளை மறுதினத்துக்குள் (14) இஸ்ரேல் பணயக் கைதிகளை விடுவிக்காவிட்டால், அமைதி ஒப்பந்தம் இரத்தாகுமென அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது.

## ''உக்ரைன் ஒரு நாள் ரஷ்ய பகுதியாகலாம்''

### ட்ரம்ப் அதிரடி



''உக்ரைன் ஒரு நாள் ரஷ்ய பகுதியாகலாம்'' என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து 'ஃபொக்ஸ் நியூஸ்' தொலைக்காட்சிக்கு வழங்கியுள்ள நேர்காணலொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

''3 ஆண்டுகால உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படலாம்; மேற்கொள்ளப்படாமலும் போகலாம். உக்ரைன் ஒரு நாள் ரஷ்ய பகுதியாக மாறலாம்; மாறாமலும் போகலாம்.

ஆனால், எங்களைப் பொறுத்தவரை உக்ரைனுக்கு நாங்கள் அளித்துள்ள நிதியுதவி அனைத்தையும் அந்த நாடு தனது அரியவகை தாதுப்பொருட்களை அனுப்புவதன் மூலம் எங்களுக்குத் திருப்பித் தர வேண்டும்.

உக்ரைன் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கான செயற்றிட்டத்தை வகுக்க என் சிறப்புத் தூதுவர் கீத் கெலாகை விரைவில் அந்நாட்டுக்கு அனுப்புவேன்'' - என்றார்.

## சட்டவிரோத குடியேறிகள் 19,000 பேரை அதிரடியாக வெளியேற்றிய பிரித்தானியா

பிரித்தானியாவில் சட்டவிரோதமாக குடியேறிய 19 ஆயிரம் பேர் அந்நாட்டு அதிகாரிகளால் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பிரித்தானியாவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களைக் கண்டறிய இந்திய ஹோட்டல்கள், விடுதிகளில் அதிரடி சோதனையை அந்நாட்டு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை வெளிநாடுகளைச் சேர்ந்த 19 ஆயிரம் பேரை பிரித்தானிய அதிகாரிகள் வெளியேற்றியுள்ளனர்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ளவர்களை வெளியேற்றும் பணியை அந்நாட்டு அரசு முன்னெடுத்து வருகிறது. அதுபோன்ற பணியை தற்போது பிரித்தானிய அரசும் தொடங்கியுள்ளது.

பிரித்தானியாவில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள அகதிகளைக் கண்டறியும் பணியில் அந்நாட்டு அதிகாரிகள் கடந்த வாரம் முதல் ஈடுபட்டுள்ளனர். சட்டவிரோதமான முறையில் தங்கியிருப்பவர்களை கைதுசெய்து அவர்களது சொந்த நாட்டுக்கு அதிகாரிகள் அனுப்பி வைத்து வருகின்றனர். இதுவரை 19 ஆயிரம் பேர் அவ்வாறு வெளியேற்றப்பட்டுள்ளனர்.





பிரித்தானிய பிரதமர் கேர் ஸ்டார்மர் தலைமையில் புதிய அரசு பதவியேற்றதும் இந்தப் பணி தொடங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அண்மையில், சட்டவிரோதமாக குடியேறிய அகதிகள் குறித்து, இந்திய ஹோட்டல்கள், விடுதிகள், கபேக்கள், வணிக வளாகங்கள், வாகனம் தூய்மை செய்யும் இடங்களில் பிரித்தானிய பொலிஸார் அதிரடியாக சோதனை நடத்தினர்.

மேலும், அங்கு தங்கியுள்ள இந்தியர்களின் ஆவணங்களையும் அதிகாரிகள் சரிபார்த்து வருகின்றனர். இந்நிலையில், ஹம்பர்சைட் பகுதியிலுள்ள இந்திய ஹோட்டலில் நடந்த சோதனையில் 7 இந்தியர்கள் கைதுசெய்யப்பட்டனர். இச் சோதனை நடவடிக்கை தொடரும் என்றும் பிரித்தானிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## லிபியாவில் படகு கவிழ்ந்து 16 பாகிஸ்தானியர்கள் பலி



லிபியா கடற்பகுதியில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 16 பாகிஸ்தானியர்கள் உயிரிழந்தனர்.

சட்டவிரோதமாக வெளிநாடுகளில் குடியேறுவதற்காக பாகிஸ்தானைச் சேர்ந்த 63 பேர் படகில் சென்றபோது விபத்து ஏற்பட்டுள்ளது. இவ்விபத்தில் 16 பேர் உயிரிழந்த நிலையில் 10 பேர் காணாமல்போயுள்ளனர். 37 பேர் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கூட்டுறவுத்துறை ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் வழங்கல்








ஜே.எம்.ஹாபீஸ்

கூட்டுறவுத்துறை சார்ந்த ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (11) குண்டசாலை, மெனிக்கின்ன, தும்பறை ரிஜண்சி விடுதியில் இடம்பெற்றது.

மேற்படி வைபவம் மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் அபயகோன் தலைமையில் இடம்பெற்றது.

குண்டசாலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 54 வருட நினைவாக இவ்வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இங்கு உரையாற்றிய ஆளுநர் தெரிவித்ததாவது,

“முன்னர் கூட்டுறவு என்பது பொதுச் சேவையையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இருப்பினும், இன்று அது திசை மாறிச் செல்வதை அவதானிக்க முடிகிறது. ஆனாலும், கூட்டுறவு என்பது கிராமியப் பொருளாதாரத்தை வளப்படுத்த கைகொடுக்க வேண்டும் என்பதை நாம் நினைவில் வைத்திருத்தல் நல்லது” - என்றார்.

இவ்வைபவத்தில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களப் பிரதி ஆணையாளர் சமிலா விஜேரத்ன, கூட்டுறவு ஆணைக்குழுச் செயலாளர் எஸ். சஜீவனி, குண்டசாலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திஸ்ஸ உடகம உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

## வெலிமடையில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

ராமு தனராஜா

வெலிமடையில் ஹெரோயின் போதைப்பொருளுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டதாக வெலிமடை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 48 வயதுடைய வெள்ளவத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

வெலிமடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய வெலிமடை நகரில் வைத்து குறித்த சந்தேக நபரை சோதனைக்குட்படுத்தியபோது குறித்த நபரிடமிருந்து சூட்சுமமான முறையில் தன்கைவசம் மறைத்து வைத்திருந்த 2100 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை நேற்றுமுன்தினம் (11) வெலிமடை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதாக வெலிமடை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.





***நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியோரத்தில் அமைந்துள்ள ‘நுவரெலியா கெலேகால’ என்ற புனித பூமியில் வீற்றிருக்கும் ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் ஸ்ரீ விநாயகப் பெருமான், அம்பாள், மயூர பலிபீடம், வழிப் பிள்ளையார் ஆகிய ஆலய பரிவார மூர்த்திகளுக்குமான மகா கும்பாபிஷேகம் செவ்வாய்க்கிழமை (11) நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.(செ.திவாகரன்)***

# சட்டவிரோதமாக பாடசாலைக் காணி கைப்பற்றியமைக்கெதிராக ஆர்ப்பாட்டம்




பெல்மதுளை நிருபர்

நிவித்திகலை கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் இ/எந்தான மீனாட்சியம்மாள் தமிழ் வித்தியாலய காணியை பிரதேச மக்கள் சட்டவிரோதமாகக் கைப்பற்றி வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் (11) செவ்வாய்க்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தின் போது மக்கள், “எமது காணிக்கு உத்தரவாதம் தாருங்கள்” என்று கோஷம் எழுப்பியதுடன் அதனைத் தடுக்க பாடசாலை அதிபர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லையென்றும் தெரிவித்தனர்.

இது குறித்து சப்ரகமுவ மாகாண ஆளுநர், மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக் கல்விக்காரியாலயம், எந்தான பொலிஸ் நிலையம் உள்ளிட்டவற்றுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து நிவித்திகலை வலயக் கல்விக்காரியாலய அதிகாரிகள் ஸ்தலத்துக்குச் சென்று நிலைமையை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதாக அறிவித்ததைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்திலீடுபட்ட மக்கள் கலைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியாவில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் விபசார விடுதி: அறுவர் கைது

செ.திவாகரன்

நுவரெலியா - கண்டி பிரதான வீதி பம்பரகலை பகுதியில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கிவந்த விபசார விடுதியொன்றை நேற்று முன்தினம் முற்றுகையிட்ட பொலிஸார், அங்கிருந்த நான்கு பெண்கள் உட்பட அறுவரைக் கைது செய்துள்ளனர்.

ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற பெயரில் பாலியல் தொழில் செயற்பாடுகள் இடம்பெறுவதாக நுவரெலியா பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நுவரெலியா மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த நிலையத்தை முற்றுகையிட்டு திடீர் சோதனை நடத்திய நிலையில் குறித்த சந்தேக நபர்கள் கைதாகினர் .

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் 21,25,34, வயதுகளையுடையவர்களெனவும் இவர்கள் வெலிமடை, இரத்தினபுரி,கொழும்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களெனவும் தெரியவந்துள்ளது.


இதன்போது விபசார விடுதி நிர்வாகத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவரும் விபசாரத்தில் ஈடுபட்ட நான்கு சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதான சந்தேகநபர்கள் விசாரணையின் மேற்கொண்டதன் பின்னர் நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



***இரத்தினபுரி, திருவானகட்டை, நாட்டுக்கோட்டை நகரத்தார் ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோயிலின் வருடாந்த தைப்பூச உற்சவம் நடைபெற்றது. இதன்போது சுவாமி வீதி உலா வருவதைப் படத்தில் காணலாம். (பெல்மதுளை நிருபர்)***

# தையிட்டி விகாரை விவகாரம் தொடர்பில் மல்லாகம் நீதிமன்றம் கஜேந்திரகுமார் எம்.பிக்கு அழைப்பாணை

சிவகுமார் திவியா


SUMMONS/NOTICE TO AN ACCUSED PERSON

B/214/PC/25




தையிட்டி விகாரை விவகாரம் தொடர்பில் மல்லாகம் நீதிமன்றம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு அழைப்பாணை விடுத்துள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்துத் தெரிவித்தபோது,

‘‘ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றிருந்த கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது தையிட்டியில் மக்களின் தனியார் காணிகளை அபகரித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானங்களை அகற்றி மக்களின் காணிகள் மக்களுக்கு வழங்கப்படவேண்டுமென்று வலியுறுத் தியிருந்தேன்.

இதன் பின்னர் ‘விகாரையை இடிக்க வாரீர்’ என்று நான் அழைப்பு விடுத்தது போன்ற விளம்பரம் வடிவமைக்கப்பட்டு போலியான விஷமப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்விடயத்தை அறிந்து, உடனேயே எனது உத்தியோகபூர்வ முகநூல் மற்றும் எக்ஸ் தளத்தினூடாக குறித்த செய்தி போலியானதெனப் பதிவிட்டதுடன், ஊடகச் சந்திப்பிலும் போலி விளம்பரம் குறித்தும் எனது நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தியிருந்தேன்.

குறித்த விடயத்தை மறுத்து எனது தெளிவுபடுத்தல்களை வெளிப்படுத்தியிருந்த போதிலும், பொலிஸாரால் மல்லாகம் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, 14ஆம் திகதிக்கு அழைப்புக்கட்டளை எனக்கு அனுப்பப்பட்டுள்ளது’’- எனத் தெரிவித்தார்.

# பதுளையில் கார் விபத்து: மூவர் படுகாயம்!

ராமு தனராஜா



பதுளை- பசறை பிரதான வீதி 4ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுக் காலை காரொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் பெண்ணொருவர் உட்பட மூவர் பலத்த காயமடைந்த நிலையில் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கார் பதுளையிலிருந்து புத்தளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வேளையில் பதுளை - பசறை வீதியில் 4ஆம் கட்டைப் பகுதியில் சுமார் 500 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்களை அயலவர்கள் உடனடியாக மீட்டு பதுளை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அங்கு அவர்கள் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை. மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அர்ச்சுனாவின் தாக்குதலுக்குள்ளாகிய ஒருவர் வைத்தியசாலையில் சேர்ப்பு

பு.கஜிந்தன்

யாழில் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் தாக்குதலுக்குள்ளாகிய நபரொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

நேற்றுமுன்தினம் (11) இரவு யாழிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றுக்கு இராமநாதன் அர்ச்சனா சென்று அங்கு காணொளிப் பதிவில் ஈடுபட்டார். இதன்போது அங்கு நின்ற நபர் தன்னை காணொளி பதிவுசெய்ய வேண்டாமென அர்ச்சுனாவிடம் தெரிவித்திருந்தார்.இதன்போது அர்ச்சனா அதனையும் மீறி காணொளிப் பதிவில் ஈடுபட்டார்.

இந்நிலையில், அர்ச்சுனாவுக்கும் குறித்த நபருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இதன்போது அர்ச்சுனா பீங்கானொன்றை எடுத்து குறித்த நபரின் தலையில் தாக்கியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற அர்ச்சனா, குறித்த நபர் தன்மீது தாக்குதல் நடத்தியதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளாரென பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# யாழ். செயலக பிரதம கணக்காளராக கிருபாகரன் கடமையேற்பு



பு.கஜிந்தன்

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளராக செ. கிருபாகரன் நேற்று முன்தினம் (11) அரசாங்க அதிபர் முன்னிலையில் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் உள்ளடங்கலான பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

பிரதம கணக்காளராகக் கடமையேற்ற செ. கிருபாகரன் முன்னர் இலங்கை ரயிலே திணைக்களத்தில் பிரதம கணக்காளராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுவந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக சுரேந்திரசேகரன்

சிவகுமார் திவியா



வவுனியா வடக்கு உள்ளிட்ட மூன்று பிரிவுகளுக்கான பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக லா. சுரேந்திரசேகரன் வவுனியா மாவட்ட நீதிபதி முன்னிலையில் நேற்று (12) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக செயற்பட்டு வந்த லா.சுரேந்திரசேகரன் தற்போது கடமையாற்றும் பகுதிக்கு மேலதிகமாக வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, வெங்கலசெட்டிகுளம் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுக்கான பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்ட நிலையில், மாவட்ட நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், வவுனியா விபுலானந்தா கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறையில் கோடா மீட்பு; இருவர் கைது



சாவகச்சேரி நிருபர்

பருத்தித்துறை மதுவரி நிலைய உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் (11) முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின்போது கசிப்பு உற்பத்திக்குத் தயாராகவிருந்த ஒருதொகுதி கோடா மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை, யாக்கரைப் பகுதியிலிருந்து கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த சந்தேக நபர்களைப் பின்தொடர்ந்து வந்த நிலையில், சாவகச்சேரி- சரசாலைப் பகுதியில் வைத்து மேற்படி கைது நடவடிக்கை இடம்பெற்றது.

பருத்தித்துறை மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி ரஷிகரன் தலைமையிலான குழுவினரே மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இருவேறு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் ஒருவர் கைது

சிவகுமார் திவியா

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் இடம்பெற்ற இரு வேறு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் கடந்த மாதம் வீடொன்றிலிருந்து கைத்தொலைபேசியொன்றும் பிறிதொரு வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளொன்றும் திருடப்பட்டிருந்தன.

குறித்த சம்பவம் தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில், அதற்கு மேலதிகமாக வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனைக்கமைவாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி அழகியவண்ண தலைமையிலான பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் முருங்கன் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் கைதுசெய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்தொலைபேசி என்பன மீட்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆஸி. அணியை அபாரமாக வீழ்த்திய இலங்கை



அவுஸ்திரேலியா அணியுடனான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் இலங்கை அணி 49 ஓட்டங்களினால் அபார வெற்றியீட்டியது.

சுற்றுலா அவுஸ்திரேலியா அணிக்கும் இலங்கை அணிக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் முதல் போட்டி நேற்று கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இலங்கை அணி ஆரம்பத்தில் 55 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறிய நிலையில் சதம் விளாசிய அணித் தலைவர் சரித் அசலங்க இலங்கை அணியை மீட்டெடுத்தார். அபாரமான முறையில் ஆடிய அவர் 127 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். இறுதியில் இலங்கை அணி 46 ஓவர்களின் 214 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

215 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஆஸி. அணி 33.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 165 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது. இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது போட்டி நாளை இதே மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# சம்பியன்ஸ் கிண்ணத்திலிருந்து விலகிய பும்ரா



ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியிலிருந்து இரு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காயம் காரணமாக இந்திய வேகப்பந்து வீச்சாளர் பும்ரா விலகியுள்ளார். இது இந்திய அணிக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் முதுகுப் பகுதியில் ஏற்பட்ட தசைப் பிடிப்பால் பாதிக்கப்பட்ட பும்ரா தொடர் சிகிச்சையிலிருந்து வருகிறார். பரிசோதனைகளில் இன்னும் ஒரு வாரத்தில் பூரண குணமடைய வாய்ப்பில்லையென்பது தெரியவந்தது. இதனையடுத்து அவர் இந்திய அணியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். இவருக்குப் பதிலாக ஹர்ஷித் ராணா இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேபோல், இந்திய அணியில் இடம் பெற்றிருந்த ஜெய்ஸ்வால் நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக தமிழக வீரர் வருண் சக்கரவர்த்திக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்திய அணியின் ரிசர்வ் வீரர்களாக யஷஸ்வி ஜெய்ஸ்வால், முஹமட் சிராஜ், ஷிவம் துபே இடம்பெற்றுள்ளனர். தேவைப்பட்டால் அவர்கள் டுபாய் செல்வார்கள் என பி.சி.சி.ஐ. தெரிவித்துள்ளது.

## விளையாட்டுத் துளிகள்

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்
Sri Lanka Cricket
Dialog

★ ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்டில் 300 ரன்களுக்கும் மேல் அடித்தும் அதிக தோல்வியை தழுவிய அணி என்ற மோசமான சாதனையை இங்கிலாந்து படைத்துள்ளது. இதுவரை 99 போட்டிகளில் 300-க்கும் அதிக ரன்களை அடித்துள்ள இங்கிலாந்து அணி இவற்றில் 28 போட்டிகளில் தோல்வியை தழுவியுள்ளது. இந்திய 136 போட்டிகளில் 300க்கும் அதிக ரன்களை அடித்து 27 போட்டிகளில் தோல்வியை சந்தித்துள்ளது.

★ மகளிர் ப்ரீமியர் லீக் தொடர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் யு.பி வாரியர்ஸ் அணியின் வழமையான கேப்டன் அலிஸா ஹீலி காயம் காரணமாக விலகிய நிலையில் அணியின் புதிய கேப்டனாக தீப்தி சர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

★ அபுதாபி ஓபன் மகளிர் டென்னிஸ் தொடரில் சுவிட்சர்லாந்தின் பெலிண்டா பென்கிக் சம்பியன் பட்டம் வென்றார். குழந்தைப் பேறுக்குபின் 13 மாதங்கள் கழித்து மீண்டும் களமிறங்கிய பெலிண்டா இறுதி ஆட்டத்தில் ஆஷ்லின் கிருகரை வீழ்த்தி 9ஆவது சம்பியன் பட்டத்தை வென்றார்.

# டெஸ்ட் கிரிக்கெட்டில் சாதனை படைத்த அயர்லாந்து



சிம்பாப்வே அணியுடனான டெஸ்ட் போட்டியை வெற்றிகொண்ட அயர்லாந்து கிரிக்கெட் அணி டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் குறைந்த போட்டிகளில் ஹெட்ரிக் வெற்றியைப் பதிவுசெய்த அணியாக சாதனை படைத்தது.

சிம்பாப்வே நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அயர்லாந்து கிரிக்கெட் அணி டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி20 போட்டிகளில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற முதலாவது மற்றும் ஒற்றை டெஸ்ட் போட்டியில் அயர்லாந்து அணி 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அசத்தியது.

அயர்லாந்து அணி தனது முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியை கடந்த 2018இல் விளையாடியது. இதன் பிறகு 2023ஆம் ஆண்டு வரை அயர்லாந்து அணி தொடர்ந்து விளையாடிய ஏழு டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியைத் தழுவியது. இதைத் தொடர்ந்து அந்த அணி தற்போது ஆப்கானிஸ்தான் மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கெதிரான டெஸ்ட் போட்டிகளில் ஹெட்ரிக் வெற்றி பெற்றது.

மேலும், டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிவேகமாக ஹெட்ரிக் வெற்றி பெற்ற அணி என்ற பெருமையை அயர்லாந்து பெற்றுள்ளது. வெறும் 10 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடிய அயர்லாந்து அணி ஹெட்ரிக் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது. முன்னதாக தென்னாபிரிக்க அணி 14 போட்டிகளில் ஹெட்ரிக் வெற்றி பெற்றதே சாதனையாக இருந்தது.

# போட்டியின்போது காயமடைந்த அயர்லாந்து இளம் குத்துச்சண்டை வீரர் மரணம்




குத்துச்சண்டைப் போட்டியில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த 28 வயதான ஜோன் கூனி மரணமடைந்துள்ளார்.

அயர்லாந்தின் பெல்ஃபாஸ்ட் நகரத்தில் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற நாதன் ஹோவெல்ஸ் என்பவருக்கெதிரான செல்டிக் சுப்பர் ஃபெதர்வெயிட் குத்துச் சண்டைப் போட்டியின் 9ஆவது சுற்றில் படுகாயமடைந்து தோல்வியடைந்தார்.

இதனைத் தொடர்ந்து, பெல்ஃபாஸ்ட்டிலுள்ள ரோயல் விக்டோரியா வைத்தியசாலையில் அவசரப் பிரிவில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வந்தார். அவரது தலைக்குள் இரத்தக்கசிவு ஏற்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு அங்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

இந்நிலையில், அவர் கடந்த சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி மரணமடைந்ததாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். அவரது மரணத்துக்கு ஏராளமான குத்துச்சண்டை மற்றும் விளையாட்டு வீரர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

முன்னதாக ஜோன் கூனி கடந்த 2023ஆம் ஆண்டு நவம்பரில் குத்துச் சண்டை வீரர் லியாம் கய்னோர்க்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்று செல்டிக் பட்டத்தை வென்றார். அதன் பின்னர் தனது கையில் ஏற்பட்ட காயத்தால் சுமார் ஓராண்டு காலம் அவர் போட்டிகளிலிருந்து விலகியிருந்ததைத் தொடர்ந்து கடந்த 2024 ஒக்டோபரில் மீண்டும் போட்டியிட்டு டான்சானியா நாட்டைச் சேர்ந்த டம்பேலா மஹருசிக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# SLT–MOBITEL, PEO SPORTS மற்றும் BASL அனுசரணையில் நடைபெற்ற 97ஆவது தேசிய குத்துச்சண்டை சம்பியன்ஷிப்



இலங்கையின் 97ஆவது தேசிய குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டிகள் அண்மையில் கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெற்றன. இலங்கை குத்துச்சண்டை சம்மேளனத்தின் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக இது அமைந்திருந்தது.

எஸ்.எல்.டி. மொபிட்டெல், பியோ ரிவி மற்றும் பியோ ஸ்போர்ட்ஸ் ஆகியன நிகழ்வின் உத்தியோகபூர்வ தொலைக்காட்சி சேவை வழங்குநர்களாக இயங்கியிருந்தன. மேலும், பார்வையாளர்களுக்கு இந்தப் போட்டித் தொடரை நேரலையாக மற்றும் இலவசமாக பியோ மொபைல் அப் ஊடாகக் கண்டுகளிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. நேரலை நிகழ்வை உலகளாவிய ரீதியில் குத்துச்சண்டை ஆர்வலர்கள் ஒன்பது மில்லியனுக்கும் அதிகமானவர்கள் கண்டு களித்தனர்.

ஆண்கள் பிரிவில் இலங்கை இராணுவம் சம்பியன்ஷிப்பை வென்றதுடன், பெண்கள் பிரிவில் இலங்கை விமானப் படை சம்பியன்ஷிப்பை வென்றது. இராணுவ குத்துச்சண்டை வீரர்களான பியல் தர்மசேன மற்றும் சந்துனி பிரியதர்ஷினி ஆகியோருக்கு அவர்களின் சிறந்த திறமைகளைக் கௌரவித்து சிறந்த குத்துச் சண்டை வீரர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

உமயங்க மிஹிரான் (பொலிஸ் விளையாட்டுக் கழகம்) ஆண்டின் சிறந்த ஆண் குத்துச்சண்டை வீரர் பட்டத்தையும் ஆர்.ஏ.என். புஷ்பகுமாரி (ஹொரண, வித்யரதென விளையாட்டுக் கழகம்) சிறந்த பெண் குத்துச்சண்டை வீராங்கனை விருதையும் வென்றனர்.

CHAMPIONS TROPHY 2025 • PAKISTAN
ICC
இன்னும் 6 நாட்கள்
பெப்ரவரி 19 முதல் மார்ச் 09 வரை




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7